Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 19 ஹிஜ்ரி 1426 ற.அவவல் 3 (02.04.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 183




# அரசுடன் இணைந்து செயற்பட

# ரணிலுக்கு இந்தியா அழுத்தம்

புதுடெல்கி

சமாதான முயற்சிகளை முன்கொண்டு செல்வதற்கு தெற்கில் கருத்தொருமைப்பாட்டை உருவாக்குவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடம் இந்தியா வலியுறுத்தவிருப்பதாக புதுடெல்கி தகவல்கள் தெரிவித்தன.

இன்று இரவு புதுடெல்கி சென்றடையும் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியத் தலைவர்கள் இதுகுறித்து வலியுறுத்துவர் எனத் தெரியவருகிறது.

இரண்டு நாட்கள் புதுடெல்கியில் தங்கியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க - இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரிலேயே ரணில் புதுடெல்கி செல்லவுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தவொரு வழிமுறையிலும் தலையிடுவதில்லை(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் களைவில் புலிகள் இறங்கினால் மிக மோசமான நிலைமை உருவாகும்!

### ஹக்ரப் ஹொக்லன்ட் எச்சரிக்கை

கொழும்பு

துணை ஆயுதக் குழுவினரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் களைவதற்கு முனைந்தால் அதுமோசமான நிலைமையை ஏற்படுத்தும் என கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் எச்சரித்துள்ளார்.

துணைஆயுதக்குழுவின் ஆயுதங்களைக் களைவதில் அரசாங்கம் காட்டிவரும் அசமந்தபோக்குக் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாட்டின் அனைத்து நீர்ப் பரப்புகளும் இலங்கையின் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளவை. கடற்புலிகளுக்கு எதுவித உரிமையும் இல்லை. இதை விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மற்றொரு கடற்படை தொடர்பாக சர்வதேச அளவில் நடைமுறைகள் இல்லை. இப்போதுதான் நாம் இது தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறோம்.

இது தொடர்பாக மேலதிகமாக நான் பேசவிரும்பவில்லை. அது ஆபத்தாக அமையும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எமது பலத்தை உணர்த்தும் வகையில் தேர்தல் முடிவுகள் அமையவேண்டும்!

### புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்

கொழும்பு

## கிழக்கில் மூன்று இடங்களில் புலிகள் மீது படையினர் தாக்குதல்

திருகோணமலை

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மீது படையினர் மூன்று இடங்களில் நடத்திய தாக்குதல்களில் போராளி ஒருவர் படுகாயமடைந்தார்.

வாகரை பனிச்சங்கேணிக்கும்

மேற்கொண்ட தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகள் சிலவும் கொல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினரும், துணை ஆயுதக் குழுவினரும் ஆர்.பி.ஜி தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச்சென்றதாக கூறப்படுகிறது.



கொழும்பு

சிங்களதேசமும், சர்வதேசமும் தமிழ் மக்களின் பலத்தை உணரும் அளவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலின் பணிகள் அமையவேண்டும் என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தின் 45 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான சந்திப்பில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் திருகோண(12 ஆம் பக்கம் பார்க்க)

போராளி ஒருவர் படுகாயமடைந்தார்.

வாகரை பனிச்சங்கேணிக்கும் மருதங்கேணிக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் - புலிகள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் போராளி ஒருவர் காயமடைந்தார்.

படையினரும், துணை ஆயுதக் குழுவினரும் அந்தப் பகுதியில் தாக்குதல் நடத்தும் நோக்கில் பதுங்கியிருந்தனர்.

அப்போது அங்கு சென்ற போராளிகள் மீது படையினரும், துணை ஆயுதக்குழுவினரும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றனர்.

அத்துடன், வாகரை - தோணி தாழ்ந்தகல் பகுதியிலும் படையினர் குழுவினரும் ஆர்.பி.ஜி தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச்சென்றதாக கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மீதான படையினரின் இத்தகைய அத்துமீறிய தாக்குதல் சம்பவங்கள் கடும் கண்டனத்துக்குரியன என்று போர்நிறுத்தக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை நமது ஈழநாட்டில்**
**க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான ஆசிரியர் லோகநாதனின் இரசாயனவியல் மாதிரி வினாத்தாள் வெளிவருகிறது. உங்கள் பிரதிக்கு முந்துங்கள்**

## உள்ளூராட்சி தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகள்

கொழும்பு

உள்ளூராட்சித் தேர்தலில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் தொடர்பான விபரங்களை தேர்தல் திணைக்களம் நேற்று வெளியிட்டது. இதன்படி

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் | வீதம் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 3376966 | 1979 | 46.46 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2413736 | 1156 | 34.77 |
| ஜே.வி.பி | 822804 | 363 | 11.85 |
| ஹெல உறுமய | 62129 | 12 | 0.89 |
| ஏனையகட்சிகள்/குழுக்கள் | 266843 | 108 | 3.84 |

# கண்காணிப்புக்குழுத் தலைவராக உல்ப் ஹென்றிக்சன் பொறுப்பேற்பு

கொழும்பு

சுவீடனின் உயர் இராணுவ அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர், கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும், இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் 60 நோர்டிக் நாடுகளின் நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இவர் தலைவராகச் செயற்படுவார்.

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் நோர்வேயைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ் ஹொவ்டே மற்றும் பிரிகேடியர் ஜெனரல் ஹக்ரப் ஹொக்லன்ட் ஆகியோர் கண்காணிப்புக் குழுவுக்கு தலைமை வகித்திருந்தனர்.

முதல் முறையாக சுவீடன் நாட்டவர் ஒருவர் இப்போது பதவி ஏற்றுள்ளார். 64வயதான பிரிகேடியர் ஜெனரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எம்து சேவைகள் 1. ஈ.சீ.ஜி 2. அவசர முதலுதவி சிகிச்சைப் பிரிவு 3. வாட் 4. போக்குவரத்துச்சேவை [நோயாளிகளுக்கு]
(C/4385)
173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை


## 40 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம் —

பாலர் கல்விக்கழகம் நடத்தும் 14பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ், ஆங்கில மொழிப் பேச்சுத்திறன் காணும் 40ஆவது விழா வைபவம் இன்று காலை 9மணிக்கு கழகத்தின் உப தலைவர் பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ்ப்பாணக் கல்விக்கோட்டப் பணிப்பாளர் என்.தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் சைவ நெறித்தேர்வுக்கான அகில இலங்கை பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு சைவபரிபாலனசபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா கலந்து கொள்ளவுள்ளார்.

## தேட்டம் கலை விளையாட்டுத்திடல்

யாழ்ப்பாணம் —

செயற்திறன் அரங்க இயக்கமும், கைதடி வடக்கு நவபுரம் மகளிர் குழுவும் இணைந்து நடத்தும் தேட்டம் கலை விளையாட்டுத்திடல் நிகழ்வு இன்று மாலை 6மணிக்கு கைதடி வடக்கு நவபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாபாலன், சிறப்புவிருந்தினராக செயற்திறன் அரங்க இயக்குனர் தே. தேவானந்த், கௌரவ விருந்தினராக கைதடி கிழக்கு கிராம உத்தியோகத்தர் செ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம் —

சர்வதேச விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் இணைந்து- மிதிவெடியால் பாதிக்கப்பட்டு செயற்கை அவயவம் பொருத்திய வலுவிழந்தோருக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று காலை 8மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன முன்றலில் ஆரம்பமாக வுள்ளது.

இந்தநிகழ்வில் - ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நிர்வாகச் செயலாளர் என்.சிவநாதன் தெரிவித்தார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : ஜே.புவிராஜ்,
முகவரி : வல்வெட்டித்துறை.



பெயர் : வி.அன்ரோ கரோஷன்
முகவரி : யாழ்ப்பாணம்.

# எம்மீதான தாக்குதல் தொடர்ந்தால் பதிலுக்கு தாக்குதல் நடத்துவோம்!

## திருமலை அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன்



திருகோணமலை —

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்பட்டால் அதற்கு பதில் தாக்குதல் நடத்துவோம் என திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தார்.

நேற்று திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி இராணுவத்தினரும், துணைஆயுதக்குழுவினரும் நடத்திய தாக்குதல் சம்பவம் குறித்து புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

கண்காணிப்புக் குழுவினர் இது தொடர்பாக விசாரணை நடத்திய போது தங்களது ஆயுதங்களை படையினர் பரீட்சித்துப்பார்த்தபோதே தவறுதலாக புலிகளின் பகுதியில் விழுந்ததாக கூறியுள்ளனர். இதை கண்காணிப்புக்குழுவினர் எம்மிடம் கூறினர்.

ஆயுதங்களைப் பரீட்சித்துப் பார்க்கிறோம் என்று கூறி இத்தகைய தாக்குதல்கள் நீடித்தால் நாங்களும் பதில் தாக்குதல் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்ற விடயத்தையும் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்தோம்.

கண்காணிப்புக்குழுவினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதே தவிர, நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. கண்காணிப்புக் குழுவினரும் ஆராய்கிறோம், தெரியப்படுத்துகிறோம் என்று தான் பதில் அளித்துக் கொண்டிருக்கின்றனர்.

படையினரது செயற்பாடுகளிலும் மாற்றமில்லை. தொடர்ந்து மோசமான தாக்குதலையே படையினர் மேற்கொண்டு வருகின்றனர். கடலிலே தாக்குதல் நடத்திய படையினர் கடற்கரையிலும் இப்போது தாக்குதல் நடத்துகின்றனர்.

இத்தகைய போர்நிறுத்த மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை நாம் கொடுத்திருக்கிறோம். சில விடயங்களில் கண்காணிப்புக் குழுவினரும் போர்நிறுத்த மீறல்தான் என்று தெரிவித்தனர். ஆனால், இதர முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்துவருகிறோம் என்ற பதிலோடு கிடப்பில் கிடக்கின்றன.

கடந்த பெப்ரவரியில் எமது போராளிகள் காணாமல்போனது தொடர்பான முறைப்பாட்டை மட்டுமல்லாமல்- கடத்தப்பட்ட சம்பவத்தை நேரடியாகப் பார்த்த சாட்சிகளையும் கண்காணிப்புக்குழுவிடம் தெரியப்படுத்தியிருந்தோம். இதற்கு படைத்தரப்பினரிடம் இது தொடர்பாக தெரிவித்துள்ளதாகவும், பதில் கிடைத்தவுடன் எங்களுக்கு தெரியப்படுத்துவதாகவும் கூறினர். எனினும், இன்றுவரை எந்த ஒரு பதிலும் வரவில்லை.

மகிந்தபுர சோதனைச்சாவடியில் துணை ஆயுதக்குழுவினர் நிற்பதாக நேரடியாகப் பார்த்த பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். படையினரது நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு படைத்தரப்பு எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

தீவுச்சேனை, வெலிக்கந்த, வாழைச்சேனை ஆகிய பகுதிகளிலிருந்துதான் துணை ஆயுதக்குழுவினர் வந்து தாக்குதல்களை நடத்துகின்றனர்.

தீவுச்சேனையில் துணை ஆயுதக்குழு முகாம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் நாம் கைது செய்திருந்த ஊர்காவல் படையினர் இருவரும் இதை உறுதிப்படுத்தினர்.

படைத்தரப்பினர் மற்றும் துணை ஆயுதக்குழுவினரது நடவடிக்கையால் மூதூர் பகுதி மக்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். அவர்களில் பெருமளவானோர் கடற் றொழிலாளர்கள். இப்போது பகல், இரவு இரண்டு வேளைகளிலும் மீன்பிடித் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த மக்கள் தமது தொழிலை இழந்தவர்களாக உள்ளனர். மக்கள் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றனர்.

குடாக்கடல் பகுதியில் பெருந்தொகையான மீன்கள் உள்ளன. ஆனால், கடற்கரையோரத்திலும், கடலிலும் படையினர் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

அத்துடன், மீனவர்களுக்கான நிவாரணம் கூட வழங்கப்படவில்லை. சம்பூர் பகுதியில் பெரியளவில் மீன் வியாபாரம் செய்தவர்கள் கூட விறகு வியாபாரம் செய்யும் நிலைமையைப் பார்க்கிறோம். இந்த நிலை மிகவும் வருத்தத்துக்குரியது. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் நேரடியாக அந்த மக்களையும் அழைத்துச்சென்று பேசினோம்.

இத்தகைய செயற்பாடுகளால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு படையினர் மீது ஆத்திரத்துடன் உள்ளனர் என எழிலன் மேலும் தெரிவித்தார்.




# பிரதேசவாதத்துக்கும், துரோகிகளுக்கும் இடமில்லையென மக்கள் நிரூபித்துள்ளனர்

## தேர்தல் வெற்றி குறித்து பத்மநாதன் எம்.பி.தெரிவிப்பு

அம்பாறை —

கொலை அச்சுறுத்தல், அரச ஒட்டுப்படைகளின் நெருக்குவாரங்கள்



உள்ளூராட்சித் தேர்தலில் கடும் சுகயீனத்துக்கு மத்தியில் பொலிஸாரின் துணையுடன் வாக்களிக்கச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன்.

மத்தியிலும் மூன்று பிரதேசசபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பெருவெற்றி பெற வைத்து பிரதேச வாதத்துக்கும், துரோகிகளுக்கும் தென் தமிழீழத்தில் இடமில்லை என்பதைச் சர்வ தேசத்துக்கும், சிங்கள தேசத்துக்கும் அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் நிரூபித்துக் காட் டியுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசத்திலுள்ள காரைதீவு, திருக்கோவில், ஆலையடிவேம்பு ஆகிய மூன்று தமிழர் பிரதேசங்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு பெரு வெற்றிவாகை சூடியுள்ளது. இது தமிழர்களுடைய ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றியே ஆகும்.

எமது தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்குப் பிரதேச வாதங்களை முன் வைத்து, எமது தாயகப் போராட்டத்தை பலவீனப்படுத்த கடந்த 58 வருடங்களாகத் திட்டமிட்ட முறையில் தமிழின அழிப்பில் ஈடுபடும் சிங்கள தேசத்துக்கும், அரசியல் நாற்காலிகளுக்காகத் தாவி அலைபவர்களுக்கும், சலுகைகளுக்காகத் தமது இனத்துக்கே துரோகமிழைத்து வருபவர்களுக்கும், அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக வழங்கிய சாட்டையடி இதுவாகும்.

எனவே, எமது தன்னாட்சி உரிமை, தாயகம், தேசியம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் இந்த உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் மூலம் நாம் தோற்றம் பெற்றுள்ளோம். எனவே, எங்கள் இனத்தின் மீதான சிங்கள தேசத்தின் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடிவரும் எமது தமிழ்த் தேசியப்படையான தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்துக்கு என்றும் நாம் உறுதுணையாகவே நிற்கின்றோம்.

மக்களே விடுதலைப்புலிகள், விடுதலைப்புலிகளே மக்கள் என்பதைத் தென் தமிழீழ மக் கள் இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் எப்போது தேர்தல் நடத்தப்படும்?

## ஆணையாளர் திஸநாயக்க விளக்கம்

கொழும்பு —

நீதிமன்றத் தடை காரணமாக நடைபெறாமலிருந்த 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் - தமிழ், சிங்கள புதுவருடம், வெசாக் மற்றும் பாடசாலை விடுமுறைகளுக்குப் பின்னர் நடத்தப்படுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது -

இந்தத் தேர்தல் அமைதியாக முடிவடைந்துள்ளது. 192 வன்முறைகள் பதிவாகி இருந்தபோதும் பாரியளவிலான வன்முறைகள் ஏற்படவில்லை.

நாவலபிட்டிய மற்றும் ஆனமடுவ ஆகிய பகுதிகளில் தேர்தல் முறைகேடுகள் நடந்ததாகக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

திருகோணமலை நகரசபை, நாவலபிட்டிய நகரசபை சிலாபம் பிரதேச சபைகளுக்கு மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் மறுதேர்தல் நடத்துவதற்கான அனுமதியில்லை. மறுதேர்தல் நடத்த வகை செய்யும் சட்ட திருத்தம் தேவை என்று 2002 ஆம் ஆண்டு தேர்தல் சீர்திருத்தப் பரிந்துரைகளில் தெரிவித்திருக்கிறோம். இதேபோல் 2003 ஆம் ஆண்டும் தெரிவித்திருந்தோம். தேர்தலை வெற்றிகரமாக முடிக்க உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம் என அவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்றுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் திட்டம்

கொழும்பு —

விரைவில் நாடாளுமன்றத்துக்கான பொதுத்.தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் பெரும் வெற்றி பெற்றுள்ளதையடுத்து சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள், விரைவில் பொதுத் தேர்தலொன்றை நடத்த வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தற்போது பாகிஸ்தானுக்குப் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் தேர்தல் நடத்துவது தொடர்பாகச் சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இழந்த நிலையில், ஜே.வி.பியின் ஆதரவுடனேயே ஆட்சியை நடத்திவருகிறது. இதனால் அரசாங்கம் தனது விருப்பம் போல எந்தச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளது. தற்போது மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கின் அடிப்படையில் நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெறக்கூடிய நிலை காணப்படுவதாகவும், இதனால் உடனடியாகப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (தே) (01)

# உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரும் ஐ.தே. கட்சியின் முயற்சி தோல்வி

கொழும்பு —

கொழும்பு மாநகர சபைக்குப் போட்டியிடுவதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் கடைசி முயற்சியும் தோல்வியடைந்துள்ளது.

கொழும்பு மாநகர சபைக்குப் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த வேட்புமனுவில் 18 வயதுக்கு குறைவான வேட்பாளர் ஒருவர் இருந்ததால் அந்த வேட்பு மனுவை கொழும்பு தெரிவத்தாட்சி அலுவலர் நிராகரித்தார்.

இந்தமுறை தேர்தல் 2004 ஆம் ஆண்டு வேட்பாளர் பட்டியலுக்கமைய நடத்தப்படுவதால், 18 வயது பூர்த்தியடையாத ஒருவரை வேட்பாளராக சேர்த்துக் கொண்டமையால், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை சட்ட ரீதியானது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு அனுமதியளிக்குமாறு கோரி ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் என்.வி. கே.கே. வேரகொட மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

எனினும், உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கு கோரப்பட்ட அனுமதியை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான கே.சிறிபவன் மற்றும் சிசிர டி ஆர்ரோ அந்த மனுவை நிராகரித்தனர்.

# அரசியலமைப்புச் சபை குறித்து ஐ.தே.கவுடன் மகிந்த பேச்சு

கொழும்பு —

அரசியலமைப்புச் சபை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார்.

அரசியல் யாப்புச் சபைக்கு சிறுபான்மைக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படும் வரை ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் பெயர்களை ஏற்றுக்கொண்டு, சபையைச் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மகிந்தவுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை மாலை அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பொதுச் செயலாளர் என்.வி.கே.கே.வேரகொட, நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவு இவர்களின் கருத்துக்கள்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து பல்வேறு அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ள கருத்துக்களின் தொகுப்பு...



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்**

திருகோணமலை மாநகர சபை உள்ளிட்ட 7 உள்ளூராட்சி சபைகளை நாம் கைப்பற்றியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. மூதூர் உள்ளிட்ட சில பகுதிகளில் தமிழர்கள் வாக்களிப்பதை அரசாங்கம் தடுத்துவிட்டது.

உள்ளூராட்சிச் சபை தேர்தல் முடிவுகளையடுத்து, பேரினவாதிகளின் கருத்துக்கள் அடங்கிய மகிந்த சிந்தனையை மாற்றியமைக்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிங்கள தீவிரவாதக் கட்சிகளும் ஜே.வி.பி.யினர் மற்றும் பௌத்த பிக்குகளின் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவினர் படுதோல்வியடைந்துவிட்டனர். ஆகையால் ஒற்றையாட்சி, தமிழர் தாயகக் கோட்பாடு, நிராகரிப்பு போன்ற அம்சங்களை மகிந்த சிந்தனையிலிருந்து மகிந்த ராஜபக்ஷ உடனே நீக்கவேண்டும்.

தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு அமைதி முயற்சிகளை உடனே அவர் விரைவுபடுத்த வேண்டும்.

கிழக்குப் பிரதேசத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குப் பாரியளவில் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினருக்கு இது பாரிய அதிர்ச்சித் தோல்வி.

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்**



கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதமாகப் பாரிய வெற்றியை அளித்துள்ளனர். துணை இராணுவக் குழுக்களை கிழக்கின் ஜனநாயக சக்திகளாகக் காட்ட முயற்சித்த இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை கிழக்குத் தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர்.

**அமைச்சர் - நிமால் சிறிபால டி சில்வா**




அமைதி முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக மக்கள் அளித்துள்ள தீர்ப்புதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தமி ழீழ விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்காக மக்கள் அங்கீகரித்து அளித்திருக்கும் தீர்ப்பு இது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதும், அரசாங்கத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

**திஸ்ஸ அத்தநாயக்க - ஐ.தே.க. -**

பெரிய அளவிலான தேர்தல் ஒன்று நடைபெற்ற பின்னர் அரசாங்கத்தில் எந்தக் கட்சி இருக்கிறதோ அதை மக்கள் ஆதரிப்பது வழமை. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் இந்தத் தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை.



**ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா**

எமது கட்சிக்கான வாக்குகள் கடந்த முறையை விட 10 வீதம் அதிகரித்துள்ளது. மகரகம, சூரியவெவ உள்ளிட்ட பல அமைப்புகளின் ஜே.வி.பி பிரதான எதிர்க்கட்சியாக வளர்ந்துள்ளது.

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரதித் தலைவர் பியசேன கமகே -**

மகிந்த சிந்தனைக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் அனைவருமே ஆதரவளித்தனர்.

தற்போது தெரிவாகி இருக்கும் அனைத்துப் பிரதிநிதிகளும் கிராமங்களின் அபிவிருத்திப் பணிக்காகப் பாடுபடுவர். அதன் மூலமாக மகிந்தவின் செயற்திட்டத்தை நிறைவேற்றி புதிய இலங்கையைக் கட்டி எழுப்புவோம்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எதிர்வரும் தேர்தல்களுக்கு முகம் கொடுக்க கட்சி மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் -**



எமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்றாலும் எமது தத்துவப் பரப்புரைகள் தொடரும்.

எமது தத்துவங்களையேற்று எமக்கு மக்கள் வாக்களித்தமைக்காக மகிழ்ச்சியடைகிறோம்.

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பேச்சாளர் ஆர். யோகராஜன்**

ஜனாதிபதித் தேர்தலின் போது வெற்றி பெறாத பல இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றியடைந்துள்ளமை திருப்தியளிக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியுடனான ஒப்பந்தப்படி மாத்தளை மாநகரசபை, ஹட்டன் - டிக்கோயா நகரசபைகள், கொத்மலை, அம்பெ கமுவ பிரதேச சபைகளில் நிர்வாகங்களை முன்னெடுக்கும் பணிகளை கட்சி மேற்கொண்டுவருகிறது.

**ஈ.பி.டி.பி - டக்ளஸ் தேவானந்தா**

வடக்கு - கிழக்கில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை வருத்தமளிக்கிறது.



தேர்தல் முடிவுகள் எப்படியானதாக இருந்தாலும், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரிப்போம்.

1994 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தேர்தலைப் புறக்கணித்தனர். 2000, 2001, 2004 தேர்தல்களில் தங்களது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குப் புலிகள் தெரிவு செய்தனர்.

அனைத்துக் கட்சிகளும் தெரிவு செய்யப்படுகிற உள்ளூராட்சி அமைப் புகளுக்கும் தங்களது பிரதிநிதியைப் பெற்றிருந்தல் அவசியம். அப்போதுதான் தங்களுக்கான உரிமைக்குப் போராட முடியும்.

**டியூ குணசேகர - அரசியல் யாப்பு விவகார அமைச்சர் -**

கிராமங்கள் ஜே.வி.பிக்கு என்று போலியான பிரசாரத்துக்குக் கிராமப் பகுதி மக்கள் இரையாகாமல் ஜே.வி.பியே அதற்கு இரையாகிப் போனது தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாகியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கும் மகிந்த சிந்தனைத் திட்டம் சமாதான முயற்சிகளின் செயற்பாடு களை மக்கள் அங்கீகரித்துள்ளதுடன், பேச்சுவார்த்தைக் எதிராக முரணான கருத்துக்களைக் கொண்டிருந்த ஜே.வி.பி மற்றும் ஜாதிகஹெல உறுமய போன்ற கட்சி கள் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.



இந்தத் தேர்தலுக்கு அமைய ஜே.வி.பி தனது கடும் போக்குடன் கூடிய நிலைப்பாட்டை மாற்றி, யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, மார்க்ஸியவாதிகளாகச் செயற்பட வேண்டும். (தே)

# இந்தியாவுக்கு இரண்டாவது வெற்றி

பரிதாபாத் —

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் பரிதாபாத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில், ரெய்னாவின் அபாரமான ஆட்டத்தால் இந்திய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி அந்த அணியின் ஸ்ரரஸும், பிரியரும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

ஆரம்ப ஜோடி அணிக்கு நல்ல அடித்தளத்தை இட்டுக்கொடுத்தது. இந்த நிலையில், 5 பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிரியர், ஹர்பஜன் சிங் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஷா ஓட்டமெதையும் பெறாமல் ரமேஷ் பவார் வீசிய பந்தை டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அவரையடுத்து பீற்றர்சன், ஸ்ரரஸுடன் இணைந்தார். இந்த இருவரும் ஆடிக்கொண்டிருக்கையில், 6 பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரரஸ், பவார் வீசிய பந்தில் போல்டானார்.

தொடர்ந்து களமிறங்கிய பிளின்ரொப் 5 ஓட்டங்களுடன் பவார் வீசிய பந்தில் டோனியால் ஸ்டம்ப் செய்யப்பட்டும், கொலிங்வூட் 5 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட் முறையிலும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அடுத்து ஜோன்ஸ் களமிறங்கினார். சற்று நேரத்தில், சிறப்பாக ஆடி 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த பீற்றர்சன், யுவராஜ் சிங் வீசிய பந்தை ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் களமிறங்கிய





பிளக்வெல் 9 ஓட்டங்களைப் பெற்று ஸ்ரீசந்த் வீசிய பந்தில் போல்டாகியும், பிளங்கெற் 4 ஓட்டங்களுடன் பதான் வீசிய பந்தில் போல்டாகியும் வெளியேறினர்.

அடுத்து கபீர் அலி களமிறங்க, 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜோன்ஸ், ஸ்ரீசந்த் வீசிய பந்தை காம்பீரிடம்





பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக அன்டர்சன் களமிறங்கினார். அவர் 2 ஓட்டங்களைப் பெற்று ஸ்ரீசந்த் வீசிய பந்தில் போல்டானார். இதனால் 49.5 ஓவர்களில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

அலி 1 ஓட்டத்துடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஸ்ரீசந்த், பவார் ஆகியோர் தலா 3, பதான், ஹர்பஜன் சிங், யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 227 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

மைதானத்தில் களமிறங்கிய ஷேவாக் - காம்பீர் ஜோடி நல்ல அடித்தளத்தை இட்டுக்கொடுத்தது. ஸ்கோர் 61 ஐத் தொட்டபோது, 4 பவுண்டரிகள் அடங்கலாக 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக், பிளக்வெல் வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து ராவிட் களமிங்க, 4 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த காம்பீர், அன்டர்சன் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து யுவராஜ் சிங் களமிறங்க, 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராவிட் ரன் அவுட்டானார்.

தொடர்ந்து களம் புகுந்த கைவ் ஓட்டமெதையும் பெறாமல், பிளங்கெற் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் ரெய்னா, யுவராஜுடன் இணைந்தார். ஆனால், யுவராஜ் 18 ஓட்டங்களைப் பெற்று பிளக்வெல் வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து டோனி, ரெய்னாவுடன் ஜோடி சேர்ந்தார். 92 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து தவித்த இந்திய அணிக்கு இந்த ஜோடி சிறப்பாக ஆடி தோள் கொடுத்தது. அவர்கள் 6ஆவது விக்கெட்டுக்கு இணைப்பாட்டமாக 118 ஓட்டங்களைப் பெற்று பரிதாபாத் மைதான இணைப்பாட்ட சாதனையை முறியடித்து புதிய சாதனை புரிந்தனர்.

அப்போது 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த டோனி, பிளின்ரொப்பின் பந்தில் போல்டானார்.

அவரையடுத்து பதான் களமிறங்கினார். ரெய்னா சிறப்பாக ஆடினார். இறுதியாக இந்திய அணி 49 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்று, 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


இதில் ரெய்னா 8 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 81 ஓட்டங்களைப் பெற்றும், பதான் 12 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் பிளக்வெல் 2, அன்டர்சன், பிளின்ரொப், பிளங்கெற் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக ரெய்னா தெரிவானார்.

# விளையாட்டு

## ஜொகனஸ்பேர்க் டெஸ்ட்; தென்னாபிரிக்கா 303





ஜொகனஸ்பேர்க் —

அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே ஜொகனஸ்பேர்க்கில் ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 303 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

டி-வில்லியர்ஸும், கிப்ஸும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். இதில் டி-வில்லியர்ஸ் 12 ஓட்டங்களுடன் ஸ்ருவர்ட் கிளார்க்கின் பந்திலும், கிப்ஸ் 16 ஓட்டங்களுடன் கஸ்பரோவிச் வீசிய பந்தில் போல்டாகியும் ஆட்டமிழந்தனர்.



அடுத்து டிப்பென்னருடன், கலிஸ் இணைந்தார். இந்த ஜோடி ஸ்கோரை உயர்த்திய வேளை, டிப்பென்னர் ஸ்ருவர்ட் கிளார்க்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து பிறின்ஸ் களமிறங்கினார். அந்தவேளை, 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த கலிஸ், லீயின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரூடொல்ப் 25 ஓட்டங்களுடன் வோனின் பந்திலும், பௌச்சர் 24 ஓட்டங்களுடன் சைமன்ஸின் பந்திலும், பொலக் 8 ஓட்டங்களுடன் ஸ்ருவர்ட் கிளார்க்கின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

இந்தநிலையில் போஜே களமிறங்க, சிறப்பாக ஆடி 11 பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிறின்ஸ், லீ வீசிய பந்தை லாங்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய நெல் ஓட்டமெதையும் பெறாமல் லீயின் பந்தில் ஆட்டமிழக்க, இறுதியாக என்ரினி களமிறங்கினார். ஆனால், மறுமுனையில் நின்ற போஜே 9 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்று கஸ்பரோவிச் வீசிய பந்தை லாங்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முதல் நாள் ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 303 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. என்ரினி ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் லீ, ஸ்ருவர்ட் கிளார்க் தலா 3, கஸ்பரோவிச் 2, வோன், சைமன்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த. உயர்தரம் - 2006 பரீட்சைக்குத்
தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான
முன்னோடிக் கருத்தரங்கு

எங்கு?
எப்போ?
எப்படி?

விபரம் வெகு விரைவில் உங்கள் அபிமான நாளிதழ் நமது ஈழநாடு பத்திரிகையில்...

அனுசரணை வழங்குபவர்கள்:
UNIT
One Step Ahead
0773134737 / 0214590720

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
BOC

LONDON ENGLISH COLLEGE
105, Arasady Road, Jaffna. T.P : 222 - 5
FOR ALL ENGLISH CLASSES
- Diploma in English — Duration : 3 Months
- IELTS — Duration : 3 Months
- Spoken English — Duration : 3 Months
- English Litterature (10, 11, 12, 13) — Duration : Annul
- English for KIDS — Duration : Annul
- Linguistics - GAQ, B.A

என்றும் தரம்! அது நிரந்தரம்!!
நாளைய தலைமுறையின் LGA 775 - Pentium 4
கணினிகளை இன்றே பெற்றிட...
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
#118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam
Leading IT Institution in Jaffna

COMMERCIAL BANK
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

# அடையாள சுகவீன லீவுப் போராட்டத்தில் மேல் மாகாண ஆசிரியரே பங்குபற்றுவர்

## தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் தெரிவிப்பு

திருகோணமலை —

நாளை அல்லது 6 ஆம் திகதி நடத்தப்பட உத் தேசிக்கப்பட்டிருக்கும் அடையாள சுகவீன லீவுப் போராட் டத்தில் இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மேல்மாகாணத்திலுள்ள அங்கத்தவர்கள் மாத்திரம் பங்கு பற்றுவார்கள்.

ஏனைய மாகாணங்களில் சேவை யாற்றும் சங்கத்தின் அங்கத்தவர்கள் தவணைப் பரீட்சைகள் போன்ற கார ணத்தால் சுகவீனப் போராட்டத்தில் கலந்துகொள்ளாது தமது வழமை யான பாடசாலைக் கடமைகளைச் செய்வார்கள் என இலங்கைத் தமி ழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செய லாளர் த.மகாசிவம் தெரிவித்துள் ளார்.

இந்த விடயம் தொடர்பாக பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

அனைத்துத் தொழிற் சங்கங்க ளாலும் முன்னெடுக்கப்படும் அடை யாள வேலை நிறுத்தத்துக்கு இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது தார்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மேல் மாகாணத்திலுள்ள எமது உறுப்பினர்கள் இந்தப் போராட்டத் தில் முழுமையாகப் பங்கேற்பார்கள்.

வடக்கு - கிழக்கில் இராணுவ நட வடிக்கைகள் காரணமாக அடிக்கடி ஹர்த்தால் நடைபெறுவதால் பல பாட சாலை நாட்களை இழந்துள்ளோம்.

தவணைப் பரீட்சைகள் நடைபெற் றுக்கொண்டிருக்கின்றன. எனவே, மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்துக்கு தமது தார்மீக ஆதரவைத் தெரிவித் துக்கொண்டு தமது வழமையான பாடசாலைப் பணியில் ஈடுபடுவார் கள்.

வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் முழுமை யான வேலைநிறுத்தம் ஒன்றை தென் இலங்கைத் தொழிற்சங்கங்கள் ஏற் படுத்துமிடத்து, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தமது முழுப் பலத் தையும் உபயோகித்து நாடு முழுவ தும் உள்ள தமிழ்மொழிப் பாடசா லைகளை முழுமையாக ஸ்தம்பிதம் அடையச் செய்யும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்!

நெல்லியடி —

மோட்டார் சைக்கிளும், துவிச்சக் கர வண்டியும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் துன்னாலை குடவத்தை யைச் சேர்ந்த நடராசா நாகேஸ் வரன் (வயது 32) என்பவர் படுகாய மடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் துன்னாலை கலிகைச் சந்தியில் நேற்றுமுன் தினம் பிற்பகல் 5 மணியளவில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

துன்னாலையிலிருந்து மந்திகை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவேளை துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் வீதி யைக் கடக்க முற்பட்டபோது ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நாகேஸ்வரன் என்பவர் தூக்கி எறி யப்பட்டு நிலத்தில் வீழ்ந்து தலையில் பலத்த காயமடைந்தார். இவர் மந் திகை வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (12)

# பொதுக்கூட்டம்

வடமராட்சி —

வடமராட்சி மென்பந்து துடுப்பாட் டச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு வடமராட்சி யிலுள்ள பதிவு செய்யப்பட்ட சகல கழகங்களின் தலைவர், செயலாளர் களைத் தவறாது கலந்துகொள்ளு மாறு வடமராட்சி மென்பந்து துடுப் பாட்ட சங்கச் செயலாளர் ச.தவேந்தி ரன் தெரிவித்துள்ளார். (12)

# சீரற்ற மின்சார விநியோகத்தால் வைத்தியசாலைப் பொருட்கள் நாசம்

யாழ்ப்பாணம் —

மந்திகை ஆதார வைத்திய சாலையில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட சீரற்ற மின் விநியோகத்தால் பல பொருட்கள் பழுதடைந்துள்ளது டன், சத்திரசிகிச்சைச் செயற்பாடுக ளும் ஸ்தம்பிதம் அடைந்தது.

மந்திகை வைத்தியசாலையில் திடீரெனக் கூடிக்குறைந்த மின்சாரத் தால் அவசர சிகிச்சைப் பிரிவில் சுவா சம், இரத்த அமுக்கம் போன்றவற் றைக் கணிப்பிடும் கருவியாகிய மொறிற்றேஸ் இரண்டும், சத்திர சிகிச் சைக் கூடத்தில் உள்ள குளிரூட்டும் சாதனமும், உள்ளகத் தொலைபேசி, சி.டி. பிளேயர் மற்றும் பல மின்குமிழ் களும் பழுதடைந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இதனால் சத்திரசிகிச்சைச் செயற் பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள தால், வடமராட்சி மக்கள் பெரும் சிர மத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. (12)

# மின் விநியோகத்துக்கு நிதி வழங்க உறுதியளிப்பு

சரவணை —

சரவணை சின்னமடு கிராமத் துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் விஜயம் மேற்கொண்டு - அங்குள்ள பாட சாலை, பொதுமண்டபம், கடற்தொழி லாளர் சங்கம் போன்றவற்றுக்கு மின்னிணைப்பு வழங்கவென இர ண்டு லட்சம் ரூபா வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

சின்னமடுவுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் யா/சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கல வன் பாடசாலையின் மின்னிணைப் புக்கு ரூபா ஐம்பதாயிரமும், சின்ன மடு பொது மண்டபத்துக்கு 40 ஆயி ரம் ரூபாவும், சின்னமடு கடற் தொழி லாளர் சங்கத்துக்கு ஒரு லட்சம் ரூபா வும் தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சி, பொதுமண்டப பயன்பாடு கடற்தொழிலாளர் சங்கத்தின் வளர்ச் சிக்கும் பெரும் நன்மைகள் ஏற்படும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர். (ரீ,62)

# புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் விபரம் திரட்டல்

புத்தூர் —

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல் லூரியின் பவளவிழா ஆண்டுச் செயற் பாடுகளில் - ஓர் அங்கமாக கல்லூரி யில் கற்பித்த ஆசிரியர்களைக் கௌர விக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதற்காக கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் பற்றிய விபரங்களைத் திரட்டும் பணி இடம்பெற்று வருகிறது.

ஆசிரியர் பெயர், கல்லூரியில் பணி யாற்றிய காலப்பகுதி, தற்போதைய தொடர்பு முகவரி முதலிய விபரங்க ளைத் தலைவர், பவளவிழாச் சபை, ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது puttursscc@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி உதவுமாறு கோரப்பட்டுள் ளது.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகளைக் கொண்டாடும் வகை யில் இடம்பெறவுள்ள வித்தியாரம்ப தின நிகழ்வுகள் அடுத்தமாதம் முத லாம் திகதி திங்கட்கிழமை இடம்பெற வுள்ளபோதே ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விப ரங்களை 02145916644, 021459 1660 என்ற தொலைபேசி இலக்கங்க ளில் பெற்றுக்கொள்ளலாம்.

1995 ஆம் ஆண்டு குடாநாட்டில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் போது கல்லூரியின் ஆவணங்கள் பலவும் சிதைவுக்குள்ளாகியிருப்ப தால், இந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் கோரப்படுவதாகக் கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தெரிவித் துள்ளார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வருடாந்த மஹோற்சவம்

வட்டுக்கோட்டை —

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகியது.

எதிர்வரும் 8 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 9 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவமும், 11 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வைரவர் பொங் கலும் இடம்பெறும்.

◆◆◆

நெடுந்தீவு —

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 10 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணி க்கு இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவ மும் இடம்பெறும். (113)

## திருவாசக முற்றோதல்

மானிப்பாய் —


தென்மராட்சி திவ்ய ஜீவன சங் கத்தின் ஏற்பாட்டில் வாரம் தோறும் நடத்தப்பட்டுவரும் திருவாசக முற் றோதல் நிகழ்வு இன்று சங்கத் தானை முருகமூர்த்தி ஆலயத்தில் காலை 7 மணிக்கு நடைபெறுமென மேற்படி சங்கத்தின் செயலாளர் சி.குல சிங்கம் தெரிவித்துள்ளார். (100)

## கொமிசியக் கூட்டம்!

மானிப்பாய் —

யாழ். கொமிசிய மரியாயின் சேனையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். பொதுநிலையினர் மண்டபத் தில் நடைபெறும் என அதன் தலை வர் அறிவித்துள்ளார்.

எனவே, பிரசீடிய அலுவலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது. (100)




தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தால் மகளிர் மனைப்பொருளியல் பயிற்சி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வினை யாழ். பிரதேச செயலர் பற்றிக் டிறஞ்சன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், தேசிய இளைஞர் சேவை மன்ற வட பிராந்திய பிரதிப் பணிப்பாளர் என்.பேரானந்தத்திடமிருந்து பயிற்சியாளர் ஒருவர் சான்றிதழ் பெற்றுக்கொள்வதையும் அருகில் உதவிப் பணப்பாளர் ரி.சிவதெட்சணமூர்த்தி, பிரதேச இளைஞர் சேவை மன்றத்தைச் சேர்ந்த திருமதி வினோதினி ஆகியோரையும் படத்தில் காணலாம். (ரி)

# யாழ்ப்பாண திரைக்கலைச் சமூகம் அங்குரார்ப்பணம் செய்து வைப்பு

யாழ்ப்பாணம் —

சலனசித்திரம் அமைப்பின் பிர தேச செயலாளர்கள் மற்றும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாப னத்தால் உருவாக்கப்பட்ட பிரதேச செயலக திரைக்கலைச் சங்க உறுப் பினர்கள் கலந்துகொண்ட கூட்ட மொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சலனசித்திரம் அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி தலைமையில் புதிய உயர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ்ப் பாண திரைக்கலைச் சமூகம் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக ஆர். பாலசுப்பிரமணியமும், உப தலை வராக எஸ்.புவனேஸ்வரனும், செய லாளராக சீ.பஞ்சநாதனும், உப செய லாளராக ஆர்.வினோஜும் பொரு ளாளராக வி.எஸ். சிவநேசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

திரைக்கலை தொடர்பான முழு மையான தெளிவைக் கொண்டதும் ரசிகர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உட்பட கலை ஆர் வலர்கள் அனைவரையும் உள்ளடக் கியதுமான உயர் சமூகமொன்றை உருவாக்குதலைத் தனது கோட்பாடா கக் கொண்டுள்ள இந்தச் சங்கம் - தரமான இரசனையை வளர்த்தல், திரைக்கல்வி புகட்டுதல், திரைப்படத் தயாரிப்புகளை ஊக்குவித்தல், கலை ஞர்களின் நலவுரிமைக்காகப் பாடு படுதல், நல்ல சினிமாக் கலா சாரத்தை உருவாக்குதல் என்ப வற்றை தனது நோக்கங்களாகக் கொண்டு செயற்படவுள்ளது.

# பங்குனி உத்தர இலட்சார்ச்சனை

கோண்டாவில் —

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனையும், விசேட திரவ் விய ஹோமமும் நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது. இது தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு அபிஷேக ஆராதனையும், 5 மணிக்கு அர்ச்ச னையும் தினமும் நடைபெற்று - 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறுகின்ற 64 உப சார விஷேட பூசை வழிபாட்டுடன் இலட்சார்ச்சனை நிறைவு பெறும்.

11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பங்குனி உத்தர நவோத்திர சஹஸ்ர 1008 சங்காபிஷேகமும், அன்றைய தினம் காலை 7 மணிக்கு விசேட அபிஷேகமும், நண்பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

இதனைத தொடர்ந்து அடியவர் நேர்த்திக்கடன் தீர்த்தலுக்கான அன்ன தானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்று - பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், 6 மணிக்கு திரு வூஞ்சல் பாடலும், காட்சியும் நடை பெற்று அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதியுலா வரு தலும் நடைபெறவுள்ளது. (82)

விமலனின்

# திசை மாறிய பறவைகள்



சமிந்த வாஸ் - "போடு தடியா? மூலைக் கல்லா?"

இலங்கை அணி குறித்து முன்பு இதே பகுதியில் நாம் கூறிய ஆரூடம் ஒன்று தற்போது பலித்துள்ளது. பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடரை இலங்கை அணி இழந்ததன் மூலம் இவ்வருடம் செப்ரெம்பரில் இந்தியாவில் நடைபெறும் ICC சம்பியன்ஷிப் போட்டிகளில் ஆடுவதற்கான நேரடித்தகுதியை இழந்துள்ளதென்பதே அது.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ICCயால் நடத்தப்படும் இந்த சம்பியன் ஷிப் தொடரில் இந்த வருடம் முதல் டெஸ்ட் அந்துஸ்து பெற்ற 10 நாடுகளில் - தரவரிசையில் முதல் ஆறு இடங்களை வகிக்கும் நாடுகள் நேரடித்தகுதி பெற ஏனைய நான்கு நாடுகளுள் தகுதிச்சுற்றுப்போட்டிகள் நடத்தப்பட்டு, அவற்றிலிருந்தே இரு நாடுகள் தெரிவு செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையிலேயே தற்போது ஏழாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்ட இலங்கை அணி - தகுதிச்சுற்று ஆட்டங்களில் இதர கடைநிலை அணிகளான மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய அணிகளுடன் தனது பலத்தை பரீட்சிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த தகுதிச்சுற்றுப்போட்டிகள் எங்கே? எப்போது? நடைபெறும் என்பது குறித்தான தகவல்கள் இதுவரை வெளியாகாததோடு - இந்த தகுதிச்சுற்று போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து அளிக்கப்படுமா என்பது குறித்த விபரமும் தெரியவரவில்லை.

பொதுவாக உத்தியோக பூர்வமற்ற போட்டிகளில் ஒவ்வொரு அணியும் ஏனோதானோ என்ற மனப்பான்மையில் ஆடுவதே வழக்கம். இருப்பினும் ICC சம்பியன்ஷிப் தகுதி சுற்றுப் போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து அளிக்கப்படாவிட்டாலும், இந்தப் போட்டிகள் விறுவிறுப்பாகவே அமையும் என்று நம்பலாம். ஏனென்றால் இந்தப் போட்டிகளில் ஆடி தகுதி பெறாவிட்டால், அது தமது கௌரவத்துக்கு இழுக்காகிவிடும் என்று கருதி இதனை சம்பந்தப்பட்ட அணிகள் சவாலாகவே ஏற்றுக்கொள்ளும்.

கடந்த மாதம் நடந்து முடிந்த இலங்கை - பங்களாதேஷ் ஒருநாள் தொடரில் இலங்கை அணி பங்களாதேஷிடம் ஒரு போட்டியில் மண்கவ்வியிருந்தது. ஆனாலும் "மோதிரக் கையால் குட்டு வேண்டுவதையே" பெருமையாகக் கொள்ளும் இலங்கை அணியினர், பங்களாதேஷ் உடனான தோல்வியைச் சகஜமாக ஏற்றுக் கொள்ளாததோடு - அதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பை பயிற்சியாளர் ரொம் மூடியும், அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் தவிர்த்திருந்தனர்.

அப்படிப்பட்டவர்களுக்கு தகுதிச்சுற்றில் ஆடுவதென்பது பெருத்த அவமானத்தைத் தரும் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. இதில் வெற்றியோ, தோல்வியோ எது கிடைத்தாலும் அதனை எவ்வாறு சகித்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பதுதான் தெரியவில்லை.

ஆனால் இன்று கையறு நிலையில் உள்ள இலங்கையணி எதைச்செய்தாலும் அது "குதிரை ஓடிய பின் லாயத்தை மூடும் செயலாகத்தான்" இருக்கும்.



மஹேல ஜயவர்த்தன - "நேர் கொண்ட பார்வை இல்லை"

பேச்சளவில் இதனைத் தடுப்பதற்கு ஒரே வழி, இந்திய அணி 2006 தவிர்ந்து இனி நடைபெறும் சம்பியன் ஷிப் போட்டிகளில் பங்கு பற்றமாட்டோம் என அறிவித்ததைப் போன்று - இலங்கை அணியும் இந்தத் தொடரிலிருந்து நாம் விலகுகின்றோம் என அறிவிப்பது தான். ஆனாலும் தார்மீக ரீதியாக நியாய சிந்தைகொண்ட எவராலுமே இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்று என்பதும் தெரிந்ததே.

இன்னொரு புறம் சர்வதேச கிரிக்கெட் சபையும் சம்பியன் ஷிப் தொடரில் ஏகமனதான் ஒரு முடிவில் இல்லாதிருப்பதும் தெரியவருகிறது.

சம்பியன் ஷிப் தொடரில் 8நாடுகள் பங்கு பற்றும்போது போட்டிகள் கனதி நிறைந்த போட்டிகளாக இருப்பது நிஜம்தான். இருப்பினும் இதனால் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற இரு நாடுகள் ஒருவகையில் பாதிப்புக்குள்ளாவதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

அதனைக் கருத்திற் கொண்டோ தெரியவில்லை, ஓரிரு மாதத்துக்கு முன்னர் சம்பியன் ஷிப் தொடரில் அனைத்து நாடுகளையும் பங்குபற்ற வழி செய்வதாக ICC அறிவித்திருந்தது. தற்போது மீண்டும் 8 நாடுகள் பங்கு பற்றும் முருங்கையில் ஏறியுள்ளது ICC. ஆக இந்த விடயத்தில் ICC திரி[illegible]நிலை போல், இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பதாகவே படுகிறது.




நிர்மலனின்

# மனிதரில் இத்தனை நிறங்களா?

மனித ஆளுமை வெளிப்படுத்தலில் தனி மனித வேறுபாடும் முக்கியமானதொன்று. ஒருவருக்குச் சரியாகத் தெரியும் விடயம் இன்னொருவருக்கு அப்படித் தெரிவதில்லை. இன்னொருவருக்கு பலமாகத் தெரியும் ஒரு அணுகுமுறை இன்னொரு வரை பாதிப்பதாயும் அமையக்கூடும்.


இதற்கு நல்லதொரு உதாரணம் இன்றைய அவுஸ்ரேலிய அணியின் முதன்மை வேகப் பந்து வீச்சாளர் பிரெட்லீ முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ பற்றியும், இன்றைய அணித்தலைவர் றிக்கி பொண்டிங் பற்றியும் ஒப்பீடு செய்துள்ளமையாகும்.



ஸ்ரீவ் வோ - "இவர் ஒரே நிறம்"

ஸ்ரீவ்வோவின் தலைமையில் தான் விளையாடிய சந்தர்ப்பங்களை விட, பொண்டிங்கின் தலைமையில்தான் ஆசுவாசமாக விளையாடக் கூடியதாக இருக்கிறது என்கிறார் லீ.ஸ்ரீவ்வோவின் காலத்தில் தான் எதனைச் செய்ய வேண்டும் என்பது பற்றிய தெளிவற்றிருந்தேன். அப்போது எனக்குத் தெளிவு போதாமல் இருந்தது. எப்பொழுதும் ஒருவர் தான் செய்வது என்னவென்பதைப் பற்றி ஒரு தெளிவுடன் இருக்க வேண்டும். அப்போது அந்த நிலை இருக்கவில்லை. ஆனால் நான் என்ன செய்ய வேண்டுமென்பதை பொண்டிங் என்னுடன் கலந்துரையாடுகிறார். மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியொன்றின் போது, அவர் என்னை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று சில விடயங்களை எடுத்துக் காட்டினார். முடிவு அந்தப் போட்டியில் என்னால் 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள் எடுக்க முடிந்தது என்று கூறியிருக்கிறார்.

இது ஒருபுறம் இருக்க பிரெட் லீயின் அமைதிக் குலைவு ஸ்ரீவ்வோவின் காலத்தில் ஏற்பட்டிருந்ததென்றால், அதற்கான நியாயபூர்வமான புறக்காரணிகள் பல இருந்தன.



பிரெட்லீ - "பார்வை பலவிதம்"

குறிப்பாக உன்னத பந்து வீச்சாளர் கிளென் மக்ரா தலைமையில் ஜேஸன் ஜிலெஸ்பி, கஸ்பரோவிச் ஆகியோர் அடங்கிய படையணியில் பிரெட்லீ இணைந்து கொள்ளும் அளவுக்கு தன் தகுதியை வெளிப்படுத்த இயலவில்லையென்பது வெள்ளிடை மலை. இந்தக் காலகட்டத்தில் அவுஸ்ரேலிய தெரிவுக்குழுவினரால் பிராந்திய ஆட்டங்களில் கலந்து கொண்டு தன் தகுதியைப் பெருக்கிக் கொள்ள பிரெட்லீ, தனது பிராந்தியத்துக்கு அனுப்பப்பட்டதையும், இசைக்குழுவினருடன் இணைந்து லீ தன் இசையாற்றலை வெளிப்படுத்தி, சிந்தனைப் போக்கில் மாற்றம் ஏற்படுத்திக்கொண்டதையும் மறந்து விடக்கூடாது. எனவே இந்த நிலையில் ஸ்ரீவ்வோ தன் அணியில் இடம் பிடிக்கத் தடுமாறும் ஒருவரை என்ன வகையில் கையாண்டிருக்க முடியும் என்பது ஒரு பெரிய கேள்விதான்.

மறுவளமாகப் பார்த்தால், இன்றைய நிலையில் கிளென் மக்ரா தற்காலிகமாக விலகிக் கொண்டுள்ள நிலையில் - ஜேஸன் ஜிலெஸ்பி, கஸ்பரோவிச் ஆகியோர் தகுதி நிலை குறைந்துள்ள நிலையில், இயல்பாகவே பிரெட்லீ தனது நிலை உயர்ந்துள்ளதைப் புரிந்து கொண்டால், ஸ்ரீவ்வோ தன்னைப் போஷிக்கவில்லை என்ற மனத்தாங்கலில் இருந்து நீங்கிக் கொள்வார்.

அன்று ஸ்ரீவ்வோ - கிளென் மக்ராவுக்கும் மற்ற இருவருக்கும் செய்ததை இப்பொழுது றிக்கி பொண்டிங் பிரெட்லீக்குச் செய்தார் அவ்வளவு தான். அவுஸ்ரேலியா வெற்றிக் கொடியை பட்டொளி வீசப் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறது.

ஜெயராட்டின்

# எங்கேயோ உதைக்கிறதே



சௌரவ் கங்கூலி - "சக்கரங்கள் சுழலும்"

டங்கன் பிளெட்சர் இங்கிலாந்துக் கிரிக்கெட் அணிப் பயிற்றுனர். இவரது கருத்தைக் கேட்டால் இந்திய கிரிக்கெட் சார்ந்த அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும். இந்தியாவில் ஒரு டெஸ்ட் தொடரைச் சமப்படுத்துவதென்பது, ஆஷஸ் தொடரை வெல்வதற்கு சமமானது என்று கூறியிருக்கிறார். அவர் இது மட்டுமல்ல, ஒரு டெஸ்ட் போட்டியில் இந்தியாவில் இந்தியாவை வெல்ல வேண்டும் என்பது அவுஸ்ரேலிய மண்ணில் அவுஸ்ரேலியாவை மண் கவ்வ வைப்பதற்குச் சமன் என்கிறார். இதோடு விட்டாரா டங்கன் பிளெட்சர் இன்னும் கூறுகிறார். அணித்தலைவர் மைக்கல் வோண், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்கஸ் டிரெஸ்கொதிக், வேகப்பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ், நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் ஜைல்ஸ் இவர்கள் எல்லாம் இல்லாமல் இரண்டாம் நிலை அணியொன்று இந்தியாவை சரித்தது அற்புதம் என்று கூறியிருக்கிறார்.

பிளின்ரொப் கலகலப்பாக பேசுவதில் சமர்த்தர். தாங்கள் மதிய போசன இடைவேளையின் போது ஆங்கிலேய கிராமியப் பாடல்களை (FOLK SONGS) கேட்டதாகவும், அதுவே 25 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுக்களைச் சரிக்க உதவியது என்றும் அட்டகாசமாகக் கூறுகிறார். இப்படியாக வெற்றியின் பின்னரான திரைக்குப்பின் நிகழ்வுகள் நிறையவே கூறப்படுகின்றன.

எல்லோருக்கும் மேலாக வீரர்கள், டங்கன் பிளெட்சர் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை பார்க்கும்போது - சிறகுக்குள்ளே தன் குஞ்சுகளைப் பாதுகாக்கும் தாய்க் கோழியுடன் தான் டங்கன் பிளெட்சரை ஒப்பிடத் தோன்றுகிறது.



டங்கன் பிளெட்சர் - "இப்படியும் ஒரு தன்மை"

இது ஒருபுறம் நடந்து கொண்டிருக்க இந்திய கிரிக்கெட் முகாம் என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்று புரியவில்லை. எதிர்காலத்தில் மீண்டும் கங்கூலி அணிக்குள் அழைக்கப்படும் சாத்தியம் இருப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சச்சின் டெண்டுல்கருக்கு எதிராக மும்பாய் கிரிக்கெட் மைதானத்தில் கேலிக் கூச்சல்கள் எழுப்பப்பட்டது பற்றி எழுதுகிறார்கள். சில விமர்சகர்கள் இந்தப்பத்தியில் ஏலவே நாம் சுட்டிக் காட்டிய இந்தியக் குடுமியை செப்பலின் கையில் கொடுத்தது தவறு என்கிறார்கள். டிராவிட் அணித்தலைவர் என்ற தகுதியின் அடிப்படையில் செயற்பட்டிருக்க வேண்டும் என்று கூச்சல் இடுகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக புதுமுகங்களாக, புதிய சூழலில் கால்பதிப்பு, இந்திய வசதிகள், சுகாதார நிலைகள் பற்றி குறை சொல்லிக்கொச்சைப்படுத்தும் தன்மையே இல்லாமல் சாதித்துவிட்டு நிற்கும் இங்கிலாந்து கிரிக்கெட் அணியை மனதார, வாயாரப் பாராட்டித் தள்ளுகிறார்கள். உங்கள் அணியையும் பாராட்டும் நிலைக்கு விரைவில் கொண்டு வாருங்கள் இந்தியர்களே என்று கிரிக்கெட் ரசிகர்கள் விருப்புடன் வேண்டுகிறார்கள்.

லிவிங்ஸ்ரனின்

# செயற்கை உரமா போடமுடியும்

இலங்கையின் மெய்வல்லுநர் விளையாட்டுத்துறை ஆரோக்கியமாக இல்லையென்பது கணிசமான காலமாக கூறப்பட்டு வரும் ஒரு குற்றச்சாட்டு. இதில் பலசாரார் குற்றம் சாட்டப்படுகிறார்கள். சில தடகள வீரர்கள் உட்பட இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகிறார்கள். மெல்பேர்ணில் இதற்கு நல்லதொரு உதாரணம் நடைபெற்று முடிவடைந்த பதினெட்டாவது பொதுநலவாய விளையாட்டுக்களில் இலங்கையின் நிலை.


சுசந்திகா ஜயசிங்க - "யார் கோபம் யார் மீது"

முன்னதாகவே இதோ தங்கம் வெல்வேன் என்று கூறிய சுசந்திகா ஜயசிங்க - இறுதி நேரத்தில் மெல்பேர்ண் நகரம் செல்வதில் இருந்து விலகிக் கொண்டார். இதேவேளை நிச்சயம் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட மஞ்சுள குமார விஜேசேகர திடீர் உபாதையில் துரதிஷ்டவசமாக விலகிக்கொள்ள நேர்ந்தது. இதன் பின்னர் எஞ்சிய யாரும் பெரிதாக மெல்பேர்ண் நகரில் சாதிப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. நடந்ததும் அதுவேதான். பிரபல்யமாக நீண்ட காலம் இலங்கைக்குப் பெருமை தேடித் தந்தவர்கள் சுசந்திகா, சிறியாணி குலவங்ஸ, சுகத் திலகரட்ண மற்றும் தமயந்தி தர்ஷா. இவர்களில் இந்த முறை கலந்துகொண்டவர் தர்ஷா மட்டுமே. ஆனால் இயல்பான கால ஓட்டப் பலவீனங்கள் தர்ஷாவையும் ஓரங்கட்டிவிட்டது.

இப்பொழுதுள்ள பாரிய வினா எதிர்வரும் தென் ஆசிய மற்றும் ஆசியப் போட்டிகளில் இலங்கை வீர வீராங்கனைகள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது தான். தென்ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை தங்கங்கள் வெல்லும். ஆனால் அது எந்த வகையிலும் திருப்திப்பட்டுக் கொள்ளக் கூடியதாக இருக்காது. ஆசியப் போட்டிகளில் சாதிக்க வேண்டும். இது முடியுமா இலங்கையால் என்பதே கேள்வி.


தமயந்தி தர்ஷா – "இவ்வளவு செய்ததற்கு நன்றி"

விளையாட்டுத் துறை விமர்சகர்கள் மிகவும் கோபமாக இருக்கிறார்கள். 'விளையாட்டுத் துறை நிர்வாகிகள் மீது பாய்ந்து விழுகிறார்கள். கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்கிறார்கள். இளம் தலைமுறையினருக்கு எதிர்காலம் பற்றி இவர்கள் என்ன திட்டங்கள் வகுத்தார்கள்? செயற்படுத்தினார்கள்? என்று குமுறுகிறார்கள். இவை யதார்த்தமானவையாகவே தோன்றுகின்றன. இலங்கையின் மெய்வல்லுநர், தடகளத்துறை மெல்லச் செத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் - மெல்லிதாக ஒரு இதயத் துடிப்பு கேட்கிறது.

அது சிந்தன விதானகே என்ற பெயரில், தொலைதூரத்தில் பொலநறுவ மாவட்டத்தில் மொனரதன்ன என்ற பகுதியில் இருந்து கேட்கிறது.

மக்டலினின்


# பொலிவைத் தந்த Bolly Wood

71 நாடுகள் பங்கு கொண்ட பதினெட்டாவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிறன்று இறுதி நாள் (CLOSING CEREMONY) நிகழ்ச்சிகளுடன் மெல்பேர்ண் நகரில் நிறைவு பெற்றன. இந்த இறுதி நிகழ்ச்சியில் 2010ஆம் ஆண்டில் அடுத்த போட்டிகள் நடைபெறவுள்ள டெல்கி நகரின் முதல்வரிடம் கொமன்வெல்த் கொடி கையளிக்கப்பட்டது.


ஐஸ்வர்யா ராய் – "ஐஸ்வர்யத்துக்கு அப்பால் ஒரு உலகம்"

இறுதி நாள் நிகழ்வுகள் என்பது மெல்பேர்ண் நகர் முழுவதையும் வாண வேடிக்கைகளால் பிரமிக்க வைத்தது. மைதானத்தில் ஆயிரக் கணக்கான வீர வீராங்கனைகள் ஒன்று கூடி ஆடிப்பாடிக் களித்தார்கள். விசேட இசை நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. இவற்றைக் கண்டு களிக்க கண் ஆயிரம் வேண்டும். இந்த நிகழ்ச்சிகளில் தூக்கலாகத் தெரிந்தது BOLLY WOOD ஆதிக்கம் என்றால் அதில் மிகையில்லை. இந்த நிகழ்வு பத்து நிமிட நேரங்கள் நடைபெற்றாலும், அதில் கலந்து கொண்டவர்களின் கனதி மிகப்பெரியது. ஐஸ்வர்யாராய், சாய்ப்அலிகான், ராணிமுகர்ஜி ஆகியோர் இந்தியக் குழுவில் இணைந்து வந்த போது, 80ஆயிரம் பேர் கொண்ட அரங்கம் அதிர்ந்தது. அதுமட்டுமல்ல, சுனில் கவாஸ்கர் (1977/1978இல் MCGஇல் செஞ்சரி போட்டவர்) கபில்தேவ் (1985 மற்றும் 1992இல் தலா 5 விக்கெட்டுக்கள் சரித்தவர்) இருவரும் இந்தியக் குழுவில் இருந்தனர். இவர்களிடம் இணைந்து இந்தியப் பாரம்பரிய கதகளி நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மெல்பேர்ண் கிரிக்கெட் மைதானம் பன்னிரண்டு நாட்கள் தினமும் 80 ஆயிரம் ரசிகர்களை குறைவில்லாமல் உள்வாங்க, தொலைக்காட்சியின் ஊடாக 150 கோடி மக்கள் இந்த விளையாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டு களித்திருப்பரென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் இளவரசர் எட்வர்ட் சம்பிரதாய பூர்வமாக விளையாட்டுகளை நிறைவு செய்து வைக்க, அவருடன் இணைந்து நின்றவர் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளெயர். இறக்கப்பட்ட கொடியைப் பெற்றுக் கொண்டவர் டெல்கியின் முதலமைச்சர் ஷீலா டிக்ஷிற். "மெல்பேர்ண் நகரே.... உலகம் இந்த நிமிடத்தில் உன்னை ஏக்கத்துடன் பார்க்கிறது" என்ற பாடலுடன் விழா நிகழ்வுகள் முடிவடைந்தன.


ராணி முகர்ஜி – "இதுவேறு உலகமை"

இந்த நிகழ்ச்சிகளை யாழ்ப்பாண சாதாரண ரசிகர்கள் EYE CHANNEL மூலம் கண்டு களித்தார்கள். CABLE TV வசதியற்றவர்களின் நிலை கூறித்தெரிய வேண்டியதில்லை. எனவே விளையாட்டு நிகழ்வுகளைத் தந்த EYE CHANNEL இற்கு நன்றி கூறுவதும் தவிர்க்க முடியாதது. இருந்தும் இன்றைய யதார்த்தத்துக்கு இணங்க விளம்பரங்கள் தொலைக்காட்சி திரையில் எல்லாப் பகுதிகளையும் ஆக்கிரமிக்க முயல்வதும் சிறிது எரிச்சலைத் தரத்தான் செய்தது. இருந்தாலும் ஒரு ஆறுதல், மூன்றாந்தர மெகா சீரியல்களில் மூழ்கியிருந்த எமது ரசிகர்களின் ஒரு பகுதியினர் பன்னிரண்டு நாட்கள் அந்தப் பாவத்தில் இருந்து தம்மைக் கழுவிக் கொள்ள EYE உதவி செய்தது. நன்றி EYE CHANNEL

ஜோசப் கிருஸ்ணாவின்


# ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...

இலங்கை விளையாட்டுத் துறையில் எவ்வளவோ திறமை வாய்ந்த வீரர்கள் ஆத்மா அழிந்து தம் துறைசார் முயற்சிகளைக் கைவிட்டிருப்பார்கள் என்பது ஒன்றும் மறைப்பதற்கு உரிய விடயம் அல்ல.

இது கூட எப்படி வெளிவருகிறதென்றால் ஒருவனின் சளைக்காத எதிர்நீச்சல் அவனுக்கு ஒரு வெளிச்சத்தைக் கொடுக்கும் போதுதான். அப்படியாக தன்னால் தன் துறையைக் கைவிட முடியாது, எந்த வறுமையிலும், வசதியீனத்திலும் சாதிப்பேன் என்று சாதித்துக் காட்டியவன் ஒருவனின் முள்நிறைந்த படுக்கை அதை எடுத்துக் காட்டுகின்றது. அவன் தான் 25 வயதான சிந்தன விதானகே. அவுஸ்ரேலிய மெல்பேர்ண் நகரில் நடைபெற்று முடிந்த பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான (COMMON WEALTH GAMES) விளையாட்டுப் போட்டியில் 62KG பளுதூக்கும் பிரிவில் இந்திய வீரரையும் பின் தள்ளி, தங்கப்பதக்கம் வென்றிருக்கிறார் இந்த இளைஞர். இவரைப் பெருமளவு ஊடகங்கள் எல்லாம் பாராட்டி முதன்மை கொடுத்துச் செய்திகள் வெளியிட்டுள்ளன. இது அவருக்கு நிறைந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்றாலும், இறந்த காலம் இவரது விளையாட்டுத்துறை, அது தொடர்பான அனுசரணை ஆதரவு என்ற வகையில் ஆறாத வடுக்களையும் ஏற்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது. ஒரு சங்கீத வித்துவானின் மகன் இவர். 1986 ஆம் ஆண்டு இவருக்கு ஐந்து வயதாக இருக்கும் போது, தந்தை இறந்து விட தனது நான்கு மகன்களையும் தாயார் மிகச் சிரமப் பட்டே வளர்த்தெடுத்திருக்கிறார்.

வடமத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கருத்துக்கூறும் போது - இந்தத் திறமை மிகுந்த இளைஞன் சரியாக துறைசார்ந்தவர்களால் கவனிக்கப்படவில்லை. இவன் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்பட்டான். 2002 இல் தேசிய விளையாட்டு விழாவில் முதன்மை, 2003 பளுதூக்கும் போட்டியில் முதன்மை இருந்தும் இவர் கண்டு கொள்ளப்படவில்லை. 2000ஆம் ஆண்டு தென்கொரிய விளையாட்டுப் போட்டிகள், 2002ஆம் ஆண்டு கிறிஸ் நாட்டில் நடைபெற்ற போட்டிகள், 2003 ஆம் ஆண்டு ரொஸ்காவில் நடைபெற்ற போட்டிகளில் எல்லாம் பங்கு கொள்ளும் தகுதியை இவர் பெற்றிருந்தார். ஆனால் செலவை அவரே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையில் மனம் உடைந்து தனக்குள்ளே அழுத இவன் தன் ஓர்மத்தை மட்டும் கைவிடவில்லை.

2005 ஆம் ஆண்டு இவருக்கு பளுதூக்கும் வீரர்கள் கைகளுக்கு பூசப் பயன்படுத்தும் பவுடர் வாங்குவதற்கு தாங்கள் வட மத்திய மாகாண சபையின் மூலம் வாதிட்டு 30ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுத்ததாக இந்த அரசியல்வாதி கூறுகின்றார். இதற்கு முன் ஒரு கிலோ 275 ரூபா விலையில் இந்தப் பவுடரை வாங்கும் பொருளாதார நிலையில் இல்லாத சிந்தன - வெறும் சீமெந்தை அந்தப் பவுடருக்குப் பதிலாகத் தன்கைகளில் பூசி பயற்சியைச் செய்திருக்கிறார் என்பது மிகவும் துயரமான செய்தி.


சிந்தன கீதால் விதானகே – "பல்லக்குகள் படை எடுக்கும் கவனம்"

இன்று ஒரு புதிய ஒளி வீசும் திசை சிந்த்தனவுக்குத் தெரிகிறது. இலங்கை ஜனாதிபதி பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வெல்லும் ஒவ்வொருவருக்கும் பத்து லட்சம் ரூபா கொடுப்பதாகக் கூறியிருந்தார். இப்பொழுது சிந்தன விதானகே பத்து லட்சம் ரூபா வென்று விட்டார்.

அவர் இலங்கை திரும்பியதும் அவரது கையில் அந்தப் பணம் இலகுவாக உடனடியாகக் கிடைக்கும் வழிவகைகளையும் ஜனாதிபதியே செய்ய வேண்டும். ஏனெனில் இலங்கை அரச நிர்வாக பாரம்பரிய தாமதங்கள், சிவப்பு நாடாச் செயற்பாடுகள் இந்த வீரரின் பரிசைத் தாமதப்படுத்தக் கூடாது. அதோடு கொழும்பில் இருந்து வெகு தூரத்தில் பொலநறுவ மாவட்டத்தில் பளுகஸ்தமன - மொனரதன்ன எனும் கிராமத்தில் இந்த வீரரைப் பெற்றெடுத்த ஏழைத்தாயின் நீண்ட காலத்துயரத்துக்கும் ஒரு முடிவு வேண்டுமல்லவா!

பிந்திய செய்தி:

ஒரு ஊடகச் செய்தியின் படி தங்கம் வென்ற சிந்த்தன இலங்கையில் இருந்து அவுஸ்ரேலியா சென்றிருந்த உத்தியோகத்தர்கள் பாராட்டி மகிழ்விக்கும் அளவுக்கு முயற்சிகள் ஏதும் பெரிதாக எடுக்கவில்லை என்று தெரியவருகிறது. இந்த வகையில் இந்த உத்தியோகத்தர்கள் நடந்திருந்தால், அது மிகவும் மனத்துயரமான விடயமாகவே இருக்கும். என்ன செய்வது சிந்தன விதானகே ஒரு ஏழையாக எங்கோ தொலை தூரக் கிராமத்தில் பிறந்து விட்டானே.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


# முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினரை கண்காணிப்பு குழுவினர் சந்தித்தனர்

## மீனவர் பிரச்சினை குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், போர் நிறுத் தக் கண்காணிப்புக்குழுவின் பிரதி நிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு கடற்தொழிலாளர் சங்க சாமசத் தலைவர் அ.மரியராசா, இலங்கைப் போர்நிறுத்த கண்கா ணிப்புக் குழுவின் வவுனியா மாவட் டத் தலைவர் ஆகியோர் நேற்று முன் தினம் மீனவர்களைச் சந்தித்து அவர் களது பிரச்சினைகள் குறித்து கலந் துரையாடி னர்.

முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீன வர்கள் கடற்படையினரால் தாக்கப் படுகின்றமை, அவர்களது தொழில் உபகரணங்கள் சேதமாக்கப்படுகின் றமை போன்ற விடயங்கள் குறித்துச் சமாசத் தலைவரால் கண்காணிப்புக் குழு அதிகாரிக்கு விளக்கப்பட்டது.

மீனவர்களது பிரச்சினைகள் குறித்து அறிக்கையைத் தயாரித்து தருமாறும், அதனை அரசிடம் ஒப்ப டைத்துக் கலந்துரையாடுவதாகவும் கண்காணிப்புக்குழு அதிகாரி தெரி வித்தார்.

முல்லைத்தீவு கடலில் கடந்த ஜன வரி மாதம் 2 மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது காணாமல் போனமை குறித்தும், கடந்த 18 ஆம் திகதி தொழிலில் ஈடு பட்டிருந்த 3 மீனவர்களின் தொழில் உப கரணங்கள் கடற்படையினரால் பறிக்கப்பட்டு கடலில் வீசப்பட்டமை குறித்தும் சமாசத்தால் எடுத்துக் கூறப் பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கடற் படையினரால் பாதிக்கப்பட்ட மீனவர் களும் கலந்து கொண்டு தமக்கு கடற் படையினரால் ஏற்பட்ட பிரச்சினை கள் குறித்துக் கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் விளக்கினர். இழந்த தொழில் உபகரணங்களைக் கடற் படையினரிடமிருந்து பெற்றுத்தர நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதேவேளை, கடற்படையினர் கரையிலிருந்து 10 கிலோ மீற்றர் அண்மித்த பகுதியில் ரோந்து நடவ டிக்கையில் ஈடுபடுவதால் தாம் தொழி லில் ஈடுபட அச்சம் கொண்டிருப்பதாக வும் மீனவர்கள் தெரிவித்தனர்.

## நடமாடும் விசேட மருத்துவசேவை

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் லெப்.கேணல் கௌசல்யன் நடமா டும் மருத்துவசேவையினர் நேற்று மன்னார் மாவட்டத்திலுள்ள வெள் ளாங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இன்று இலுப்பைக் கடவை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் - பற்சிகிச்சை, நவீன உபகரணங்களுடன் கூடிய பொதுமருத்துவம், கண்சிகிச்சை, ஆய்வுகூடப் பரிசோதனை போன்ற விசேட சிகிச்சைகளை நடத்துகின்ற னர்.

எனவே, இந்த நோய்களுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் இந் தச் சிகிச்சைகளில் கலந்துகொண் பயன்பெறுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

## விசர் நாய்க்கடி மருந்துக்கு கிளிநொச்சியில் தட்டுப்பாடு

கிளிநொச்சி—

விசர்நாய்க்கடிக்கான ஏ.ஆர். வி. ஊசி மருந்துக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சிலவாரங்களாக நாயி னால் கடியுண்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவோரின் தொகை அதிகரித்துள் ளது.

எனினும் வைத்தியசாலையில் ஏ.ஆர்.வி. தடுப்பு மருந்து முடிவ டைந்துள்ளது. இதனால் விசர்நாய்க் கடிக்குள்ளாகி சிகிச்சைக்கென வரும் நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் வவுனியா மாவட்ட வைத்தியசா லைக்கு அனுப்பப்பட்டு வருவதாக, மாவட்ட வைத்தியசாலை அதிகாரி இ.சதானந்தன் தெரிவித்தார்.


## பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி

புதுக்குடியிருப்பு—

முல்லைத்தீவு மாவட்டப் பாடசா லைகளுக்கிடையிலான உடற்பயிற் சிப் போட்டி கடந்த புதன்கிழமை ஒட்டு சுட்டான் மகாவித்தியாலயத்தில் துணுக் காய் வலய உதவிக் கல்விப் பணிப்பா ளர் திருமதி வ.சந்திரபாலன் தலை மையில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் பெண்கள் பிரி வில்-முதலாம் இடத்தை கொக்கிளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை யும், இரண்டாம் இடத்தை ஒட்டுசுட் டான் மகாவித்தியாலயமும், மூன் றாம் இடத்தை கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற் றன.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மல்லாவி மத்திய கல்லூரியும், இரண்டாம் இடத்தை கொக்கிளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை யும், மூன்றாமிடத்தை புதுக்குடியி ருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியா லயமும் பெற்றன. (வெ)




கிளிநொச்சி - பரந்தன் பரிவர்த்தனை நிலையத்தையும், அண்மையில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் புதிதாகப் பொருத்தப்பட்ட பரிவர்த்தனை ஆழியையும் படங்களில் காணலாம். (ரி)

## கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு புலிகளின்குரல் அமலன் அரங்கில் பரிசளிப்பு

கிளிநொச்சி—

தமிழீழ வனவளப் பாதுகாப்பு பிரி வின் அனுசரணையுடன் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய 'இயற்கை எமது நண்பன்' நிகழ்ச்சி ஊடாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகின.

கம்ஷாலினி - இராஜேந்திரன் (கிளிநொச்சி தெரேசா பெண்கள் பாட சாலை - தரம் 8), எஸ்.ஜெயவேணி (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் - தரம் 9), யோ. டிலானி (கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயம்- தரம் 11), வி.சுஜேந்தினி (மு.பாண்டி யன்குளம் மகாவித்தியாலயம் - தரம் 8),கருப்பையா டெனிசியா (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் - தரம் 11), சந்திர சேகரன் பானுப்பிரியன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம் - தரம் 6), பர மேஸ்வரன் தாட்சாயினி (கிளிநொச்சி மத்தியகல்லூரி - தரம் 11), தி.தனுசா (வவுனியா, மாறா இலுப்பை அ.த. பாடசாலை - தரம் 9), ப.ரஜீகா (கிளி நொச்சி நல்லூர் மகாவித்தியாலயம் - தரம் 11), சி.கோகுலவேணி (மு.உடை யார்கட்டு மகாவித்தியாலயம் - தரம் 9), ஜெ.துஸ்யந்தன் (கிளிநொச்சி கன காம்பிகைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - தரம் 10), ச. துவா ரகா (கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயம் - தரம் 8), கோபிகா அற்புதலிங்கம் (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி -தரம் 8), பைரவி நவரத்தினராசா (கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயம், முரசுமோட்டை), சோபிதா சிவசம்பு (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி - தரம் 10), ச.ஜெயரூபன் (கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயம் - தரம் 8), கு.மயூரன் (முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), சு.ஜீவாசினி (முல் லைத்தீவு யோகபுரம் வித்தியாலயம் தரம் 10), யோ.நளினி (முல்லைத்தீவு தேறாங்கண்டல் தமிழ் வித்தியால யம் - தரம் 8), இ.புனிதன் (குரவில் தமிழ் வித்தியாலயம் - தரம் 8).

இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பணப்பரிசும், பாராட்டுச் சான்றிதழ் வழங்கலும் புலி களின் குரல் நிறுவன அமலன் அரங் கில் இன்று காலை 10 மணிக்கு நடை பெறவுள்ளதால், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (கு)

## விண்ணப்பம் கோரல்

மருதங்கேணி—

மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்கு வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர் தரம் I அல்லது அதிபர் தரம் 2 - I இல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பப்படிவங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல் விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலு வலகம், வடமராட்சி, புலோலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வ ராசா அறிவித்துள்ளார்.

## மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு

கிளிநொச்சி—

தமிழீழ மகளிர் இசைக் குழுப் போராளியும், தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் நுண்கலைமாணி கண்ணதாசனின் மாணவியுமான கலைமகள் இராசரட்ணத்தின் மிரு தங்க அரங்கேற்ற நிகழ்வு லெப். கேணல் நவம் அறிவுகூடக் கலைய ரங்க மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில்- பிரதம விருந்தி னராகத் தமிழீழ விடுதலைப் புலிக ளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கலந்துகொள் ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பா ளர் புதுவை இரத்தினதுரை, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமி ழினி, யாழ். பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் மா.சிதம்பர நாதன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

மதிப்பீட்டுரையைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் விரி வுரையாளர் தர்மபூபதி சிதம்பர நாதன் நிகழ்த்தவுள்ளார். (09)

## மின்சாரம் வழங்கப்படவில்லை

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதிக ளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதிலும், இதுவரை யில் அதற்கான ஆரம்ப நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கபடவில்லை.

புதுக்குடியிருப்பின் பிரதான வீதி கள் சிலவற்றுக்கு ஏற்கனவே மின்சா ரம் வழங்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இருப்பினும் ஏனைய வீதிகளுக் கும் மின்சாரம் வழங்கப் போவதாக வும், அந்தச் செயற்பாட்டை இலகு வாக மேற்கொள்வதற்காக வீதியோர மரங்களை அகற்றுமாறும் தெரி விக்கப்பட்டது. ஆனால், இதுவரை யில் இதற்கான ஆரம்ப வேலை எது வும் நடைபெறவில்லை. (கு)

## வவுனியா ப.நோ.கூ. சங்கத்துக்கு ஒருகோடி 55 லட்சம் அழிவு!

வவுனியா—

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரண மாக ஒரு கோடியே 55 இலட்சம் ரூபா அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

1997 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜெயசிக்குறு படைநடவடிக்கையின் போது இந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அழிவுக்குள்ளானமை குறிப் பிடத்தக்கது. (கு)

## முழங்காவில் மக்கள் குறைநிவர்த்தி சேவை

கிளிநொச்சி—

கிளிநொச்சி - முழங்காவில் கம நல கேந்திர நிலையத்தில் வடக்கு - கிழக்கு மாகாண விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்தொழில் அமைச்சும், திணைக் களங்களும் இணைந்து நடத்தும் 2006ஆம் ஆண்டுக்கான மக்கள் குறை நிவர்த்தி சேவை எதிர்வரும் செவ் வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10 மணி தொடக்கம் பிற் பகல் 5 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - விவசாய அமைப் புக்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, காணி, நன்னீர் மீன்பிடி போன்றவற் றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாமென வடக்கு - கிழக்கு மாகாண விவசாய அமைச்சு அறி வித்துள்ளது. (கு)

## சொலிடார் நிறுவனத்தால் உடுத்துறை மக்களுக்கான கலந்துரையாடல்

இராமநாதபுரம்—

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற் காக சொலிடார் நிறுவனம் பல வேலைத் திட்டங்களை நடை முறைப் படுத்திவருகிறது.

இந்த வகையில் கடந்த செவ்வாய்க் கிழமை வடமராட்சி கிழக்கு உடுத் துறைக் கிராமத்திலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் காலை 10 மணிக்கு கிராம மக்களுக்கான கலந்துரையா டல் சொலிடார் நிறுவன பிரதி நிகழ்ச் சித்திட்ட முகாமையாளர் ரவி தலை மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி, சுவிஸ் நாட்டைச் சேர்ந்த சுவிஸ் தொழிலாளர் உதவி நிறுவ னத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி கரின் லொயிட், வட மராட்சி கிழக்கு திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் பாலையா, சொலிடார் நிறுவன நிகழ்ச்சித் திட்டமுகாமையா ளர் கத்தரின் வைக்மன், சொலிடார் நிறுவன கட்டடக் கலைஞரும், நிகழ்ச் சித்திட்ட முகாமையாளருமான சபா நாகநாதன், கிராம உத்தியோகத்தர் கள், கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்ட னர்.

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எந்த உதவியும் வழங்கப்படவில்லை

புதுக்குடியிருப்பு—

கடந்த வருடம் நவம்பர் மாதம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பெய்த கடும் மழையால் பெரும் பாதிப்புக் குள்ளான குடும்பங்களுக்கு இது வரையும் உதவிகள் எதுவும் வழங் கப்படவில்லையென பாதிப்புக்குள் ளான மக்கள் விசனம் தெரிவித்த னர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள் ளப் பெருக்கினால் மக்களின் குடியி ருப்புக்களுக்குப் பெரும் அழிவுகள் ஏற்பட்டன.

இந்த அழிவுகள் காரணமாக மக் கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்தனர். இவர்களுக்கு அர சால் சமைத்த உணவு மட்டுமே வழங்கப்பட்டது.

ஆனால், வீடுகளை முற்றாக இழந்த குடும்பங்களுக்கு இதுவரை யும் எந்தவிதமான உதவியும் அர சால் வழங்கப்படவில்லையென மக் கள் விசனம் தெரிவித்தனர். (வெ)

## எட்வின் பயிற்சி பாசறையில் தற்காப்பு பயிற்சி ஆரம்பம்

புதுக்குடியிருப்பு—

புதுக்குடியிருப்பிலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர் களுக்கான தற்காப்புப் பயிற்சி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புதுக்குடியிருப்பு எட்வின் பாசறையில் ஆரம்பமாகியது.

புதுக்குடியிருப்பு வணிகர் கழகத் தலைவர் பெ.கந்தசாமி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை மாவீரர் ஒருவரின் தந்தையும், எல்லைப்படை வீரருமான இராசதுரை ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கருத்துரையை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சி.வேதவனம் நிகழ்த்தினார். சிறப்புரையை முல்லைத் தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் நிகழ்த்தினார். இந்தப் பயிற்சியில் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். (வெ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# வலுப்பெறும் தேசியம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இரண்டு பிரதேசசபை ஆசனங்களை ஒட்டுமொத்தமாக வாரிச் சுருட்டிக்கொண்டதுடன் - காரைதீவு பிரதேசசபையையும் தன்வசப்படுத்திக் கொண்டிருக்கிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

அகில இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிகழ்த்தியிருப்பது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் நிகழ்ந்திராத ஒரு சாதனையாகும்.

நடைமுறையிலுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் இப்படி ஒட்டுமொத்த ஆசனங்களையும் சுருட்டிக் கொள்வதற்கு வாக்காளர்களின் அமோகமான ஆதரவு இருக்கவேண்டும்.

பல கட்சிமுறை, பல்வேறு இனத்தவர்களின் பரம்பல் என்பன இப்படிப்பட்ட வெற்றிக்குக் குறுக்கே நின்றாலும், தனியான இனத்துவப் பரம்பல் உள்ள இடங்களில்கூட எந்த ஒரு தேர்தலிலும் இப்படி வெற்றி கிட்டவில்லை.

ஆனால், ஒன்றுக்கு இரண்டு சபைகளில் 97, 98 சதவீத வாக்குகளுடன் தமிழரசுக் கட்சி நிகழ்த்தியிருப்பது பிரமிக்கத்தக்க சாதனைதான். இந்தச் சாதனை வெற்றிக்குக் காரணம் என்ன? இந்த வெற்றி எடுத்துக்கூறும் செய்தி என்ன? என்பதை ஆழமாக நோக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கில் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்று இழுபறிப்பட்டதால், பிரசாரங்கள் எதற்கும் ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறவில்லை. இறுதியில் அம்பாறையிலும், திருமலையிலும் தேர்தல் நடக்குமென அரசு அறிவித்தபோது - தமிழரசுக்கட்சியால் பெருமெடுப்பில் பிரசாரங்களை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, பிரசாரக் கூட்டங்கள் நடத்தியோ, வாக்குறுதிகளை அள்ளி வீசியோ தமிழரசுக் கட்சி இந்த வெற்றியைப் பெறவில்லை. அப்படியானால் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த இந்த வெற்றிக்கு என்ன காரணம்?

தமிழ்த்தேசியம் என்ற கொள்கையின் அடிப்படையில்தான் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தமது அமோகமான ஆதரவை தமிழரசுக் கட்சியின் மீது வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு - அம்பாறையில் தமிழ் தேசியத்துக்கு விரோதமான சக்திகள் காலூன்றுவதற்கு முயற்சிகள் எடுத்திருந்தபோதே, நாடாளுமன்றத் தேர்தலின்போது அதற்கு சாவுமணி அடித்த கிழக்கு மாகாண மக்கள் - இன்று இந்த அசைக்க முடியாத நிலைப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்தைச் சிதைக்க கருணாவின் மூலம் சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொள்ளும் முயற்சிகள் கொஞ்சம்கூட வெற்றி பெறவில்லை என்பதுடன், அந்த முயற்சிக்கு எதிராக எந்தளவு வலுவுடன் நிற்கிறார்கள் என்று இந்தத் தேர்தலின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது.

வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழரின் தாயகத்தைச் சிதைக்கவோ - பிரிக்கவோ முடியாது என்பதை அம்பாறை தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு வெளிப்படுத்தி நிற்கிறது.


தமிழ் தேசியத்தைத் தோற்கடிக்க படுகொலைகள், அராஜகங்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துமே வீண் என்றாகிப் போயுள்ளது. இனிமேலாவது சிங்கள பௌத்த பேரினவாதிகளாகட்டும், தமிழ்த் தேசிய விரோத சக்திகளாகட்டும் இதனை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றுபட்ட தமிழ்த் தேசிய இனமாக விடுதலைப் போராட்டத்தில், உரிமைப் போராட்டத்தில் ஈடுபடும் உறுதியுடன் இருக்கும் கிழக்குப் பகுதி மக்களை இனிமேலும் சீண்டிப் பார்ப்பது ஆபத்தானது என்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இல்லையேல், இந்தச் சக்திகள் தமிழ்த்தேசியம் என்ற சுழியில் அகப்படப்போவது தவிர்க்க முடியாததாகி விடும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்




# தமிழீழ தாயக மக்கள் தங்கள் தீர்மானத்தில் தெளிவாகவே உள்ளனர்

## ஊர்சுற்றியார் எழுதுவது

என்னதான் தந்திரங்கள், தகிடுதத்தங்கள், பொய்ப்பிரசாரங்கள், உதவிகள், உபகாரங்கள் என்று மக்களைத் தங்கள் பக்கம் வளைத்துப் போடுவதற்கும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடுவதற்கும் எத்தனங்கள் செய்தாலும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் முடிவில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். தலைவர்களும், அரசியல்வாதிகளும் குழம்பிப் போகிறார்களேயொழிய மக்கள் எந்தக் குழப்பமுமில்லாமல் மிகத் தெளிவாக இருக்கிறார்கள் என்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. நீர் என்ன சொல்லுகிறீர் என்று நண்பர் பரதேசியாரிடம் கேட்டேன்.

நான் என்ன சொல்லுவது. ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் என்ன நோக்கத்துடன் சொன்னாரோ தெரியவில்லை. வடக்குக் கிழக்கில் ஒத்திவைத்திருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தலை நடத்தி முடித்திருக்கலாம் என்பதே எனது கருத்து மாகும். தமிழர் தாயகத்தில் இப்பொழுதல்ல எப்பொழுது தேர்தல் நடத்தி மக்கள் கருத்தைக் கேட்டாலும் மக்கள் தமிழீழத் தேசிய உணர்வையே வெளிப்படுத்துவார்கள்.

தமிழர் தாயகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களையும் விரைவில் நடத்த வேண்டும். தமிழர் தாயக மக்கள் தெளிவான முடிவைத் தெளிவாகத் தெரிவித்துவிடுவார்கள் என்று பரதேசியார் சொன்னார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் தாயக மக்கள், தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அத்தனைபேரையும தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து- தமிழீழ விடுதலையே தங்கள் ஓரே இலட்சியம் என்பதை மக்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். ஆனால், ஆட்சிக்கு வந்த கூட்டமைப்பு வழமைபோல தமிழீழ எதிர்ப்புக் குரலையும், விடுதலைப் புலிகளுக்கு எதிர்ப்பான நடவடிக்கைகளையுமே மேற்கொள்ளத் தொடங்கி- இன்று வரை நடந்து வருகின்றது. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைக்குத் தலைவராக தமிழர் கூட்டமைப்புப் பிரதிநிதிகளில் ஒருவரை நியமிக்காமல் புலி எதிர்ப்புப் பிரசாரகரான 'வகுப்பில் ஒரு பிள்ளை அவன்தான் முதற் பிள்ளை' என்பது போல இருக்கும் ஒரே தமிழ் அமைச்சரைத் தலைவராக நியமித்துத் தமிழ்ப் பிரதிநிதிகளையும், தமிழ் மக்களையும் எரிச்சலுக்குள்ளாக்கியது அரசாங்கம் என்று சொன்னேன்.

இது என்ன இப்பொழுதுதான் முதல் தடவையாக நடைபெறுகிறதா? எந்தக் காலத்திலும், இந்தப் பிரித்தாளும் தந்திர வேலையைத்தானே சிங்களஆட்சியாளர்கள் செய்து வருகிறார்கள். தமிழர் கூட்டணியினரை மக்கள் பெருமளவில் தெரிவு செய்து அனுப்பியபோது செல்லையா குமாரசூரியரை வைத்துச் சாதிக்க சிறிமா அம்மையார் எத்தனிக்கவில்லையா? இப்பொழுதும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தமிழர் ஒருவரையாவது வைத்துக் காரியம் செய்விப்பதென்பது அவர்கள் தீர்மானம். அரசின் இந்தச் செயல்களுக்குத் தூண்டுகோலாக சில ஊடகங்களும் செயற்படுகின்றன என்று பரதேசியார் சொன்னார்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிக ஊழல் குற்றச்சாட்டுகள் எழவில்லை. வாக்களித்தோர் குறைவாக இருந்தாலும், தேர்தல்கள் நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்திருப்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே இடைமறித்த பரதேசியார்; ஆனந்த சங்கரியார் எங்கே? அவர் குரலையே காணவில்லையே! கடந்த பொதுத் தேர்தலில் புலிகளின் மிரட்டலில்தான் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்களென்றும், தேர்தலில் மோசடியும், ஊழலும் நடைபெற்றதென்றும் உளறிக்கொண்டிருந்தார். ஜனநாயக முறையில் தேர்தல் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறவில்லையென்றும் சொன்னார். இப்பொழுது நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பொதுவாகக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களித்துத் தெரிவு செய்யும் தேர்தலாகும். இதில் சங்கரியார் ஒன்றும் சொல்லவில்லையே! ஆளே நாட்டில் இல்லையோ? பரதேசியார் கேட்டார்.

எப்படியும் எங்கிருந்தாவது தனது இருப்பைக் காட்டிக் கொள்வதற்காவது குரல் கொடுப்பார். என்னதான் எழுதிக் குவித்தாலும் அரச தரப்பில் யாரும் அவரைக் கண்டு கொள்ளாதது அவருக்குப் பெரும் கவலைதான். ஜெனீவா மாநாட்டுக்காவது அவரை நிமால் சிறிபால கூட்டிப் போயிருந்திருக்கலாம் என்று நான் சொன்னேன். அவரைக் கூட்டிக் கொண்டு போய்விட்டால் இங்கு கடிதங்கள் எழுதுவதற்கு வேறு யாரைத் தேடிப்பிடிப்பது என்றார் பரதேசியார்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. புலி எதிர்ப்புப் பிரசாரத்தினால் சாதிக்கப்போவது எதுவுமில்லையென்பதை மகிந்த முதலில் தனது சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். பாகிஸ்தானோ வேறெந்த நாடுகளோ புலிகளை எதிர்த்துப் போரிடுவதற்கு ஆயுதங்கள் கொடுக்கலாம். பயிற்சியு மளிக்கலாம். ஆனால், படைகளை அனுப்ப முடியாது. அந்த ஆயுதங்களையும், பயிற்சியையும் வைத்து இங்குள்ளவர்கள் தான் போரிட முடியும். ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் நடந்த போருக்குப்பின் தப்பியோடிய படையினருக்கு மன்னிப் பளித்து மீண்டும் திருப்பி எடுக்கும் முயற்சி இன்னமும் முடிவடையவில்லை. பட்டாளத்திலிருந்து தப்பியோடிக் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டுச் சிறையிலிருப்பவர்களுக்கே பெருந்தொகை செலவிடவேண்டியிருக்கிறது. இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் காவல்துறையினர் தங்கள் நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. இது தவிர பாகிஸ்தான் என்ன உதவி செய்யப் போகிறது. எப்படி உதவி செய்கிறதென்பதை இந்தியா அவதானமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவுமே பாகிஸ்தான் என்ன செய்கிறதென்பதைத் தனது கழுகுக் கண்களால் கவனித்துக் கொண்டிருக்கிறது என்று நான் சொன்னேன்.

இந்த நிலையில் இலங்கையில் பகையை வளர்க்கும் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் நல்ல சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறது.

இனவாதப் பிரசாரங்களுக்கு மக்கள் ஆதரவளிக்கவில்லை. நோர்வேயை வெளியே அனுப்பு. புலிகளுடன் போர் தொடுத்துத் தோற்கடிக்க வேண்டுமென்ற கோஷங்களை எழுப்பிய ஜே.வி.பியையும், ஹெல உறுமயவையும் மக்கள் தூக்கி எறிந்துவிட்டார்கள் என்று பரதேசியார் சொன்னார்.

இன்றுள்ள ஒரே நல்ல வழி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறுமென்று கடந்த மாநாட்டில் செய்த முடிவின்படி இரண்டாவது சுற்றுப்பேச்சு வார்த்தையை நல்ல முறையில் அரச தரப்பில் பொருத்தமானவர்களை அனுப்பி நடத்தவேண்டும். கடந்த பேச்சில் துணைப்படையினரின் ஆயுதக் களைவு பற்றிய முடிவை வெவ்வேறு வியாக்கியானம் செய்யாமல் இனியாவது ஆயுதங்களைக் களைய வேண்டும். முன்னர் ஆயுதக் குழுவாக இருந்து இப்போது அரசியல் குழுக்களாகச் செயற்படுபவர்கள்தான் இருப்பதாக அரச தரப்பில் சொல்வதற்குத் தயாராவதாகத் தோன்றுகிறது என்று பரதேசியார் சொன்னார்.

இப்படியொரு தந்திரம் எடுபடுமென்று பேரினவாதிகள் எதிர்பார்க்கிறார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் போரை விரும்பவில்லை. புலிகளுடன் பேச்சு நடத்தியே தீர்வு காண்பதை விரும்புகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் திட்டத்தை அடுத்த மாநாட்டில் அரசு அறிவிக்கவேண்டும். இல்லையேல் விடுதலைப் புலிகள் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய முற்பட்டால் என்ன நடக்கும், என்ன விளைவுகள் ஏற்படுமென்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டுமென்று சொன்னேன்.

பயங்கர விளைவுகளுக்கு இடம்கொடாமல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மக்களிடமே மகிந்தர் புதிய ஆணையைக் கேட்கலாமே என்றார் பரதேசியார் .

ψ

**புலிகளின்குரல் வானொலியில் அரசியல் அரங்கம் நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.**


# இரட்டை தட அணுகுமுறையை அரசு கைவிட முன்வருமா?

அமைதிக்கான பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகள், தோல்விகள், பாடங்கள் என்ற வகையில் அண்மையில் ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்த நூலை சிங்களத்தில் குமார் ரூபசிங்க தொகுத்திருக்கிறார். இந்த நூலில் பல தரப்பட்ட கருத்துகள் இருக்கின்றன. அதில் முக்கியமாக எரிக் சொல்ஹெய்மின் நீண்ட செவ்வி ஒன்றும் அதில் இடம்பெற்றுள்ளது. ஓரளவுக்கு மனம் திறந்து முதன் முறையாக எரிக்சொல்ஹெய்ம் அதில் பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னணி, இதில் தலையிட்ட விதம், இந்தியாவுடனான தொடர்புகள், அவரது கருத்துகள் எனப் பலவற்றை அவர் சொல்லியிருக்கிறார். அவரது கருத்துகளை இங்கே நாங்கள் பேசுவது என்பது அந்தக்கருத்துகள் எங்களுக்கு ஆதரவாக இருக்கிறது அல்லது எங்கள் பரப்புரைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல.

இந்தத் தீவில் நீண்டகாலமாக உள்ள எங்கள் தேசியப் பிரச்சினையை ஒரு தடப்பாதையாக இல்லாமல் நயவஞ்சகமாக இரு தடப்பாதையாகவே தலையிட்டவர்கள் அனைவரும் மேற்கொண்டனர். அண்மையில் மகிந்த நடத்துகிற பேச்சுகள் கூட இரு தடப்பாதையாகவே செல்கிறது.



ஒரு தடத்திலே பேச்சுவார்த்தை என்றும் மறு தடத்திலே பேச்சுவார்த்தையைக் குழப்புகிற செயற்பாடுகள் எனவுமாகச் செல்வதை நாம் கண் கூடாகவே பார்க்கிறோம்.

ஒரு பக்கத்தில் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பியினர் எங்களது கொள்கைகளைத் தீர்மானிக்க முடியாது என்றும், மறுபக்கத்தில் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆதரவு எங்களுக்குத் தேவை என்றும் சொல்கிற நிலைமை உள்ளது.

இந்த நூல் இரு பகுதிகளாக வெளிவந்திருக்கிறது.

நடந்த அத்தனைப் பேச்சுக்களையும் நீங்கள் பார்த்தால் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன.

இப்போதைய பேச்சுவார்த்தை முடிவடையாத நிலையில் வெற்றியா, தோல்வியா என்று கூற முடியாவிட்டாலும் கடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியாக இருக்கிறமையால், அதற்கூடாகப் பெறுகிற பாடங்கள் முக்கியமானவையாக இருக்கிறது.

இந்தியப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும், இந்தியத் தலையீடு தொடர்பாகவும் 'ஹிந்து' தோமஸ் ஏபிரகாம் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

கடைசியாக அவர் சுருக்கித் தொகுத்துச் சொல்கிற செய்தி என்னவெனில், "இந்தியா இரட்டைத்தட மூலோபாயத்தைப் பின்பற்றியதால் இந்தப் பேச்சுகள் வெற்றி தரவில்லை" என்கிறார்.

ஒன்று - வெளிப்படையாக அமைதி முயற்சிக்கு இந்தியத் தரப்பு ஆதரவளிப்பது போலவும்,

மறுபுறத்தில் - புலிகள் போன்ற இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து அழுத்தம் கொடுக்க ஆயத்தமாகித் தோல்வியடைந்த நிலைமை தொடர்பாகவும் அவர் எழுதியுள்ளார்.

முக்கியமாக, இந்த மூலோபாயம் ஏன் தோற்றதெனில் -

விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதங்கள் கொடுத்துப் பயிற்சி அளித்துப் போராட விடுவது என்பது தமிழீழத்தை அடைவதற்கான இலக்குக்காக இந்தியா செய்திருந்தால் நிச்சயமாக அது வெற்றி பெற்றிருக்கும் என்று அவர் எழுதியிருக்கிறார்.

நிச்சயமாக இது நல்ல கருத்து. நாம்-தமிழ் மக்களும் அப்படித்தான் பார்க்கிறோம். தமிழீழத்தை அடைவதற்கான ஒரு வழியாகப் போராளி இயக்கங்களுக்கு ஆயுதத்தைக் கொடுத்து அதை அடைவதற்கு முயன்றிருந்தால் இந்தியா வென்றிருக்கும்.

ஆதலால், இந்தியா கடைப்பிடித்த வேறு மாதிரியான இரட்டைத் தடக்கோட்பாடு வெற்றி பெறவில்லை என்கிறார்.

பண்டா - செல்வா பேச்சுகள் தோல்வியில் முடிந்தமைக்கு அப்பால்-

இந்தியப் பேச்சுகள் தோல்வியில் முடிந்தமைக்கு அப்பால் -

இப்போது பேச்சுகள் நடக்கின்றன.

1999 ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சினை தொடர்பாக கதைத்திருப்பதாக எரிக் சொல்ஹெய்ம் கூறியிருக்கிறார்.

இனப்பிரச்சினையில் நோர்வே தலையிட்டதன் பின்னணியையும் அவர் கூறியிருக்கிறார்.

பனிப் போர் காலம் முடிவடைந்த 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஒரு புதிய உலகத்தில் அமைதிக்கான முயற்சியில் தாங்கள் ஒரு சிறிய பங்களிப்பைச் செய்ய விரும்பி பழைய வரலாற்று மரபுக்கேற்ப தலையிட்டதாகத் கூறுகிறார் எரிக் சொல்ஹெய்ம்.

தொடக்கத்தில் மத்திய கிழக்கு பலஸ்தீனிய - இஸ்ரேலிய சிக்கல், கௌதமாலா பிரச்சினைகளில் தலையிட்டதையும் அண்மைக் கால மாக இலங்கை, சூடானில் தலையிட்டதையும் விபரித்துக் கொண்டு செல்கிறார்.

ஈராக்கிலும், பிலிப்பைன்சிலும் கொலம்பியாவிலும் தலையிட்டதைக் கூறுகிற எரிக்சொல்ஹெய்ம் இலங்கை விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதாகக் கூறுகிறார்.

தென்னாசிய பிராந்தியத்தில் ஒரு புதிய வல்லரசு தலையிட இந்தியா விரும்பாது என்ற நிலையில், சிறிய நாடாக இருக்கிற நோர்வே எதுவித அரசியல் அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாது என்பதால் நோட்டிக் நாடுகள் தலையிட்டமையை இந்தியா ஒப்புக்கொண்டது என்கிறார் அவர்.

சிறிய நாடுகள் தலையிடுவது நல்லது என்று அவர் கூறுவதைப் போலவே வலிமை மிக்க நாடுகள் தலையிடலாம் என்றும் சொல்லுகிறார்.

அமெரிக்கா போன்ற நாடுகள் இங்கே நேரடியாகத் தலையிடுகிறபோது அவர்களால் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு கூடிய அழுத்தங்களைக் கொடுத்துத் தீர்வுக்குச் செல்ல வைக்க முடியும் என்கிறார் எரிக்.

அதற்கு உதாரணமாக பொஸ்னியா பிரச்சினையில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

பொஸ்னியாவில் உள்ள செர்பியர்களும், குரோசியர்களும் முஸ்லிம்களால் பெய்ட்டன் நகருக்குக் கட்டாயமாக வரவழைக்கப்பட்டு ஒரு இடத்தில் தங்க வைக்கப்பட்டு, தீர்வுக்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் தொலைத்துவிடுவோம் என்கிற நிலையில் விரட்டப்பட்டு ஒப்பந்தம் உருவானது என்பதை அப்போது நாங்கள் அறிவோம்.

'நீங்கள் இந்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் உங்கள் மேல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு, உலகத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டு, பொருண்மியத் தடைகள் விதிக்கப்படுவீர்கள்' என்று அழுத்தம் கொடுக்கப்பட்ட வரலாற்றை இப்போது எரிக் சொல்ஹெய்மே சொல்கிறார்.

இப்போது ஒரு கேள்வி எழுகிறது. நோர்வே போன்ற நாடுகளுக்குப் பின்னால் இயங்குகிற வல்லரசுகள் ஒரு கட்டத்துக்கு மேல் பிரயோகிக்கப்போகும் அழுத்தங்கள் யாருக்கு ஏற்படும்? நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறோம் என்கிறபோது அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

அப்படியானால் நோர்வேயால் என்ன மாதிரியான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். சம்பந்தப்பட்ட இரு தரப்பும் தாங்களாகவே பேச்சுக்குத் தீர்வு காண்பதற்குச் சிறிய அளவில்தான் தங்களால் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை அமெரிக்காவை உதாரணம் காட்டி எரிக் சொல்ஹெய்ம் சொல்கிறார்.

அதே நேரத்தில் ஈராக் போன்ற சில இடங்களில் அமெரிக்காவால் கூட இதைச் செய்ய முடியாது என்கிறார்.

பொஸ்னியா பிரச்சினையில் கொடுக்கப்பட்ட அழுத்தங்களைப் போல் சிங்களத் தரப்புக்குக் கொடுக்க முடியாது என்றும் எரிக் சொல்ஹெய்ம் ஒப்புக் கொள்கிறார். ஆகையால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் தலையில் விழுகிறது.

அந்த வகையில்தான் தங்களுடைய தலையீட்டை இந்தியா போன்ற நாடுகள் ஏற்றுக்கொண்டதாகவும் மறைமுகமாக அவர் தெரிவிக்கிறார்.

ஆகவே, இத்தகைய தலையீடுகள் கூட ஒரு எல்லைக்கு அப்பால் செல்ல முடியாது என்பதை நாம் இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அடுத்து, நோர்வேக்கு எதிரான சிங்களத் தரப்பின் - ஊடகங்களின் விசமத்தனமான பிரசாரத்துக்கு ஓரளவுக்கு நோர்வேயைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம் விளக்கமாகப் பதில் சொல்கிறார்.

"ஓரளவுக்கு அரசியலில் விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இயல்பான விமர்சனங்களை - சட்ட ரீதியானவற்றை நாம் ஏற்றுக்கொள்வோம்.

ஆனால், இலங்கையில் விமர்சனங்கள் விசமத்தனமாக இருக்கின்றன. பத்திரிகைகளை விற்பனை செய்வதற்கான நம்ப முடியாத கதைகளை எதுவித உண்மைகளுமின்றி எழுதுகின்றனர். ஒரு செய்தியை எழுதுகின்ற போது தவறு ஏற்பட்டால் அதை ஏற்றுக்கொண்டு மறுநாளே திருத்தம் போடுகிற வழமை உலகத்திலும் குறிப்பாக இந்தியாவிலும் இருப்பதை எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால், இலங்கையில் ஒருபோதும் செய்தியின் உண்மைத்தன்மை விசாரிக்கப்பட்டு எழுதப்பட்டதாக வரலாறே இல்லை என்று மனம் நொந்து சொல்கிறார்.

புலிகள் சில வானொலி ஒலிபரப்புக் கருவிகளை வாங்கியது பற்றிய செய்தியை உதாரணமாகச் சுட்டிக்காட்டுகிறார் எரிக் சொல்ஹெய்ம்.

இந்தக் கருவிகள் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அமைதிக் காலத்தில் தொடர்பு சாதனங்களுக்காகக் கொடுக்கப்பட்ட கருவி. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருவி. இலங்கையின் இராணுவம், கடற்படை மற்றும் பலதரப்பட்ட நாடுகளுக்கும் எப்படி நோர்வே இராணுவப் பயிற்சி அளித்ததோ, அதேபோல புலிகளின் தரப்புக்கும் ஆரம்ப கட்டத்தில் பகிரங்கமாகவே பயிற்சி அளிக்கப்பட்டது என்கிறார் அவர்.

இது போன்ற செய்திகளைச் சில காலத்துக்குப் பின்னால், குப்பைக் கூடைக்குப் போன செய்திகளை ஏதோ கண்டுபிடிப்பாகக் கருதி பரப்புரை செய்வதைத்தான் மனம் நொந்து சொல்கிறார் அவர்.

இலங்கையின் ஊடகங்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்தில் ஒரு கருத்து வந்துள்ளமை தொடர்பாக நாம் திருப்தி கொள்கிறோம்.

2000 ஆம் ஆண்டுக் கால கருத்துருவாக்கத்தினால் இலங்கையில் அமைதிக்கான ஒரு சிறிய இடம் கூட இல்லாமல் செய்துவிட்டார்கள்.

சிங்களத்திலே என்ன நடந்தாலும் - ஒரு களவு நடந்தாலும் கூட புலிகள் செய்தார்கள் என்று உருவாக்கி வைத்திருக்கும் காலத்தில் அமைதி எவ்வாறு உருவாகும்? என்ற கேள்விக்குச் சான்றாக எரிக் சொல்ஹெய்மின் கருத்து உள்ளது.

இலங்கையில் உண்மையிலேயே ஒரு போர் நிறுத்தத்தை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் செய்ய வேண்டும் என்பது எங்களது தனிப்பட்ட கருத்து.

இலங்கை ஊடகங்கள் தங்களது எதிர்மறையான போக்கை மாற்றாவிட்டால், இலங்கையில் நடுநிலையாளர்களின் நிலைப்பாடு மக்களிடம் சென்றடையப் போவதில்லை -

நோர்வே வெளியேற வேண்டி நேர்ந்தால் - நோர்வே தீர்மானித்தால் இந்தத் தீவில் எவருமே நடுநிலையாளராகச் செயற்படமுன்வரமாட்டார்கள் என்கிறாரவர்.

ஏனென்றால், நோர்வேக்கு நடந்ததை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார்.

நோர்வே வெளியேற்றப்பட்டால் என்ன நடக்கும்? விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கூறுவது போல், நடுநிலையாளர்கள் வெளியேற்றப்பட்டால், இந்தத் தீவில் அமைதிப் பேச்சுக்கான வாய்ப்பே இல்லாமல் போகும் என்றார்.

அதுதான் நடக்கும்.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற முக்கியமான கேள்விக்கு அவர் சொல்லும் பதில்.

புலிகளை அரசியல் மயப்படுத்த வேண்டும். இராணுவத் துருப்புச் சீட்டைப் பயன்படுத்தாமல், அரசியல் துருப்புச்சீட்டை அவர்கள் பயன்படுத்துவதற்குப் பயிற்றுவிக்கப்பட்ட வேண்டும் என்று வழமைபோல் சொல்கிற எரிக் சொல்ஹெய்ம்- இன்னொரு பக்கமாக, ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்றாக செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்கிறார்.

அவரது வார்த்தைகளிலேயே சொல்வதானால்,

"பண்டா -செல்வா ஒப்பந்தம் தூக்கி எறியப்பட்டது. டட்லி - செல்வா ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது. இந்த இரண்டும் சுதந்திரக் கட்சியாலும், ஐக்கிய தேசியக் கட்சியாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள். இவர்கள் இருவர் மீதுமே தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

இந்த மாதிரியான நம்பிக்கையீனம் உள்ள போது இலங்கை அரசாங்கத்தை எவ்வாறு நம்ப வைப்பதென்பது எங்களுடைய முக்கிய பணியாக இருக்கிறது. ஆகவே; இரு கட்சிகளையும் ஒன்றுபடுத்தி - இலங்கை அரசை ஒருநிலைப்படுத்தி - அரசாங்கம் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதனூடாகத்தான் நாங்கள் அமைதி முயற்சிக்கான பெரிய தடையை மாற்ற முடியும்" என்கிறார்.

இவை நடக்கக் கூடிய காரியமா? இல்லையா? என்பதை நடைமுறையில் பார்ப்போம்.

இந்த இரண்டு கட்சிகளுமே பல்வேறு வகையில் செயற்பட்டுப் பதவிக்காக ஒன்று சேர்வதில் பிரியமாக இருக்கிறார்கள். தேசிய அரசாங்கமாக இல்லாவிட்டாலும் இந்த இரு கட்சிகளும் ஒன்றாக மாறி ஒரே தலைமையின் கீழ் வரும் போது - மகிந்த ஒரு தீர்வை வைக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க முடியும்.

இந்தக் காலகட்டத்தில் ஜே.வி.பி என்ன செய்யப்போகிறது?

ஜே.வி.பியை எப்படி ஷகயாளப் போகிறோம் என்பது பற்றி எந்த இடத்திலும் எரிக் சொல்ஹெய்ம் பேசவில்லை. அதைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறார். அதுபற்றி நாமும் பேசவிரும்பவில்லை.

முன்னர் சொன்னது போல் இந்தப் பேச்சுக்களில் இரட்டைத்தடஅணுகுமுறை எப்படி இருக்கிறது?

அண்மையில் ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற தேசிய இனச் சிக்கல் ஆய்வாளர் சச்சிதானந்தம் சதாசிவம் அதை எழுதியிருந்தார்.

அரசாங்கம், இந்தியா, இணைத்தலைமை எல்லோருமே போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஊடாக புலிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிழல் போரை சமகாலத்திலே மேற்கொள்கிறார்கள் என்று மிகக் கடுமையாக எழுதியிருக்கிறார்.

இரட்டை நிலைக்கு உதாரணமாகச் சொல்வது, துணை இராணுவக் குழுக்களை வைத்துக் கொண்டு இல்லையென்பதும் - ஆயுதத்தைக் கொடுத்து விட்டு ஆயுதங்களைப் பறிக்க முடியாது என்றும் கருத்துகளைச் சொல்வதும் தான் என்கிறோம் நாங்கள்.

புலிகளுடைய இராணுவப் பலத்தைக் குறைப்பதற்கான இரு வழிகளைப் பற்றி கட்டுரையாளர் சச்சிதானந்தம் சொல்கிறார்.

இளங்குருத்தாக வெளிப்படுகிற புலிகளின் அரச கட்டமைப்பை இல்லாது செய்ய வேண்டும்.

அவர்களுடைய மைய இராணுவப் பலத்தைக் குலைப்பதற்கு, இரட்டைத் தட நிலையை உலகம் பின்பற்ற வேண்டும் என்பதான நிலைப்பாடுகளை இலங்கை மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக்குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாகவே நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஜெனீவா பேச்சுக்களில் தடையாக உள்ள காரணியை அகற்றச் சொல்லி நாங்கள் கேட்கிறோம். அது அகற்றப்படவில்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அந்தக்கட்டுரையாளர் கூறுகிறார் - புலித் தலைவருடைய வியூகம் காரணமாக இலங்கையின் முயற்சிகள் அனைத்தும் தடைப்பட்டு நிற்கின்றன. இனி அடுத்து என்ன முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறார்கள் என்று சதானந்தன் கேள்வி எழுப்புகிறார்.

ஆக ஒரு செய்தி துலாம்பரமாகத் தெரிகிறது. இரட்டைத் தட அணுகுமுறை என்பது ஒரு கட்டத்துக்கு அப்பால் பயன்படாது. உண்மையான அமைதியைக் கொண்டு வர வேண்டுமானால், ஒரு தடப் பாதையைத்தான் எரிக் சொல்ஹெய்ம் பின்பற்ற வேண்டும்.

அந்தத் தடத்தைப் பின்பற்ற வேண்டுமானால் ஊடகத் தடைகள் நீக்கப்பட வேண்டும். இருகட்சிகளும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும். அதற்கு அப்பால் தமிழ் மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இந்த நீண்ட செயற்பாட்டுக்கு இரட்டைத் தட அணுகுமுறையைக் கைவிட்டு சிங்கள அரசு முன்வருமா? என்கிற கேள்வி மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. ☆

## இலவச தொலைக்காட்சி என்ற

# கருணாநிதியின் தேர்தல் அறிவிப்பு; நாடே சிரிக்கிறது என்கிறார் வைகோ



சென்னை —

தமிழக சட்டசபைத்தேர்தலில் அ.தி.மு.கவுடன் ம.தி.மு.க கூட்டணி சேர்ந்து போட்டியிடுகிறது.

இதனால் அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ பிரசாரம் செய்கிறார்.

அவர் தனது முதல் பிரசாரத்தை சொந்த ஊரான நெல்லை மாவட்டம் சங்கரன் கோவில் தொகுதி கலிங்கப் பட்டியலில் நேற்றுமுன்தினம் மாலை தொடங்கினார். இந்தக் கூட்டத்தில் அவர்பேசியதாவது -

தி.மு.க கூட்டணியில் இருந்து விலகி அ.தி.மு.க கூட்டணியில் சேர்ந்தது பற்றி நான் முன்னரேயே விளக்கினேன். இங்கு நான் அதுபற்றி கூற வேண்டியதில்லை.

எதற்காக இந்தக் கூட்டணிக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கூறுகிறேன் என்றால் - ஒரு குடும்ப வளர்ச்சியை மட்டும் பார்ப்பவர்களுக்கு அல்லாமல், தமிழக முன்னேற்றத்தை எண்ணிப்பார்ப்பவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்காக.

கலைஞர் கலர் தொலைக்காட்சி கொடுப்பதாக தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளார். இதைக்கேட்டு நீங்கள் மட்டுமல்ல நாடே சிரிக்கிறது.

பசியால் வாடுகின்ற வறுமையை ஒழிக்க முடியாமல் திணறுகின்ற மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும், தமிழகத்தின் பொருளாதாரத்தை உயர்த்த திட்டம் தராமல், தொலைக்காட்சி தருவதாக கூறுகிறார்கள். இந்தத் தொலைக்காட்சிகளை ஏழைகளுக்கு கொடுப்பதால் -தமது குடும்ப தொலைக்காட்சி பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது என்றுகூறி விளம்பரத்துக்கு 1 நிமிடத்துக்கு 5 லட்சம் வாங்குபவர்கள் 10 லட்சம் என்று வசூலிக்கலாம். பணம் அதிகம் சம்பாதிக்கலாம். பணம் சேர்க்க இது ஒரு வழி என்பதால் அறிக்கையாக கொடுத்துள்ளார்.

தி.மு.க தேர்தல் அறிக்கையில் 2 ரூபாவுக்கு அரிசி கொடுப்போம் என்பது நாட்டு மக்களை ஏமாற்றும் மோசடித்தனமாகும், அநியாயம் ஆகும். இதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கலைஞரை பத்திரிகையாளர்கள் சந்திக்கும்போது ம.தி.மு.க பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோது பதில் சொல்லாமல் ஆத்திரப்படுகிறார்.

மீண்டும் நீங்கள் குடும்ப அரசியல் நடத்துவதாக வைகோ குற்றம் சாட்டுகிறாரே என்று கேட்டபோது எனக்கு குடும்பமும் உள்ளது என்றார். கலைஞர் அவர்களே! நான் உங்கள் குடும்பத்தைக் குறைசொல்லவில்லை. உங்கள் குடும்பத்துக்காக கட்சியை பயன்படுத்துகிறீர்களே அதைத்தான் எதிர்க்கிறேன். உங்கள் குடும்ப அரசியலைத்தான் எதிர்க்கிறேன்.

ம.தி.மு.க வின் 4 எம்.பிக்களையும் அடகு வைத்து மத்திய அமைச்சர் பதவி வாங்கியதாக வைகோ கூறுவது பற்றி நிருபர்கள் கலைஞரிடம் கேட்டனர். அதற்கு அவர் - பச்சை பொய். ம.தி.மு.கவை சொல்லி நாங்கள் பதவி கேட்கவில்லை என்று கூறும் போது பதற்றப்பட்டு தடுமாறுகிறார். முதல் சுற்றிலே தடுமாறுகிறீர்களே? இன்னும் இறுதி சுற்றுவரை செல்ல வேண்டி உள்ளதே?

என்று நான் கேட்ட ஒருகேள்விக்கே உங்களால் பதில்சொல்ல முடியவில்லை. 36 நாள் பிரசாரத்திலும் ஓராயிரம் கேள்விகள் கேட்பேன், அதற்கு பதில் சொல்ல வேண்டும். உங்களால் முடியுமா?

ம.தி.மு.க எம்.பி.க்களை வைத்து பதவி வாங்கவில்லை என்கிறீர்கள். இது குறித்து பிரதமரிடம் நான் கேட்டபோது அவர் சோனியாகாந்தி சொன்னதால் கொடுத்ததாக கூறினார். சோனியா காந்தியிடம் கேட்டபோது ம.தி.மு.கவும், தி.மு.கவும் ஒரு கூட்டுத்தான் என்று மொத்தம் 20 எம்.பிக்கள் கணக்கு சொல்லி அமைச்சர் பதவிகளை பெற்று இருக்கிறீர்கள். சோனியா காந்தியிடம் நான் ம.தி.மு.க தனி, தி.மு.க தனி என்று சொல்லி இருக்கிறேன். இதை நான் பெரிய பிரச்சினை ஆக்க விரும்பவில்லை என்று கூறினேன்.

தமிழ்நாட்டு மக்கள் மீது அக்கறை இல்லாமல் தனது குடும்பமே வாழ வேண்டும் என்று அக்கறையில் உள்ளவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும். தமிழகம் செழிக்கவும், முன்னேற்றம் அடையவும் இந்த பொற்கால ஆட்சி தொடரவேண்டும்.

இப்போது வைகோ ஏன் போட்டியிடவில்லை, சங்கரன்கோவில் கேட்டார், வாசுதேவநல்லூர் கேட்டார், கோவில் பட்டி கேட்டார், கொடுக்கவில்லை அதனால் அவர் தேர்தலில் போட்டியிடவில்லை என்கிறார்கள். அப்படி அல்ல.

நான் நமது சகாக்களை போட்டியிட வைக்க வேண்டும் என்பதற்காக தேர்தலில் போட்டியிடவில்லை என வைகோ தெரிவித்தார்.

# பொற்கால ஆட்சியைத் தொடர மக்கள் ஆதரவு தரவேண்டும்!

## முதலாவது பிரசாரக்கூட்டத்தில் ஜெயலலிதா



சென்னை

பொற்கால ஆட்சி மீண்டும் தொடர ஆதரவு தாருங்கள் என்று கூறி முதல்வர் ஜெயலலிதா அ.தி.மு.க கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

சட்டசபைத் தேர்தலையொட்டி 34 நாட்கள் பிரசாரப் பயணத்தை சென்னை சைதாப்பேட்டையில் தொடங்கி அவர் பேசியதாவது-

கடந்த 2001 இல் உங்களைச் சந்தித்து பொற்கால ஆட்சி அமைக்க ஆதரவு கேட்டேன். நீங்களும் வள்ளலாக அள்ளித் தந்தீர்கள். உங்கள் நம்பிக்கையை செயற்படுத்துவதே கடமை எனச்செயற்பட்டேன். உங்கள் நம்பிக்கை எந்த வகையிலும் வீணாகவில்லை. எதிர்பார்த்ததைவிட அதிகமாக திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளேன்.

எதிர்பார்ப்புகளை திட்டங்கள் ஆக்கினேன். திட்டங்களை சாதனைப் படிக்கட்டுகளாக்கினேன். பணிகளைச் சாதனைகளாகப் பரிணமிக்கச் செய்தேன். இதற்காக உங்களுடன் இணைந்து பிறமாநிலத்தினரும், வெளிநாட்டவர்களும் பாராட்டுகிறார்கள். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

பெண்கள் முன்னேற்றத்துக்காக அவர்கள் சொந்தக்காலில் நிற்க மகளிர் சுய உதவித்திட்டம் மற்றும் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகளில் அன்னதானத் திட்டம். இவையெல்லாம் வெற்றித்திட்டங்கள்.

இதற்கு ஒத்துழைக்காத மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது.

தமிழகத்துக்கு நன்மை கிடைக்கக்கூடாது என்பதில் 13 அமைச்சர்கள் சுயநல மனப்பான்மையோடு செயற்படுகின்றனர்.

முட்டுக்கட்டை போடும் எதிர்க்கட்சிகளின் அடாவடித்தனம் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு இந்தச் சாதனை படைத்துள்ளோம்.

இந்த வீரசாதனைகள் உங்கள் ஆதரவால்தான் முடிந்தது. மீண்டும் உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். உங்களுடன் தேர்தலில் கூட்டணி வைத்துள்ளேன். அதுதான் ஜனநாயக மக்கள் கூட்டணி. உங்கள் வெற்றி என் வெற்றி. என்றும் உங்கள் ஆதரவு தேவை. மீண்டும் பொற்கால ஆட்சியைத் தொடர உங்கள் ஆதரவைப்பெறவந்துள்ளேன் எனத் தெரிவித்தார்.




# எதற்கும் அஞ்சத் தேவையில்லை என்கிறார் கலைஞர் கருணாநிதி



சென்னை —

தமிழக மக்கள் தான் நிரந்தர எஜமானர்கள். வேறு எதற்கும் தி.மு.க அஞ்சாது என்று அந்தக் கட்சித் தலைவர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

அவர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் -

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க சார்பில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காதவர்களை தங்கள்பக்கம் சேர்க்க சிலர் முயற்சிக்கிறார்கள். கழுகின் கால்களில் அகப்பட்ட சிறு பிராணிகள் போல அவர்கள் சிக்கக்கூடாது.

மறைந்திருந்து தாக்குகிற, முகமூடி அணிந்திருந்து முதுகில் குத்துகிற, ஒளிந்திருந்து பாய்கிற ஒரு சிலருக்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

அடுத்து எடுத்து வைக்கும் அடியை எச்சரிக்கையாக வைக்க வேண்டுமே தவிர எதற்கும் அஞ்சவோ, எவரிடமும் கெஞ்சவோ, தேவையில்லை. அவர்களை நமக்கு எஜமானர்கள் என எண்ணவும் தேவையில்லை.

நமக்கு நிரந்தரமான எஜமானர்கள் தமிழ்ப் பெருமக்கள் தான் என்ற உறவு மனப்பான்மையும், தன்மான உணர்வும் பெற்றவர்களாக தி.மு.கவினர் பயணத்தைத் தொடர வேண்டும் என கருணாநிதி குறிப்பிட்டார்.


SRI LANKA RED CROSS SOCIETY

**Community Based Health Project, Jaffna**

**Assistant Project Coordinator**

Sri Lankan Red Cross Society, Jaffna Branch is calling application for the post of Assistant Project Coordinator. Application should be sent under the registered cover to reach on or before 17 April 2006 to:

**The Branch Executive Officer**
**Sri Lankan Red Cross Society**
**Jaffna District Branch,**
**No.73, Kandy Rd, Jaffna.**

*Professional requirements:*

- Diploma or Degree in Public Health, Social science or related field
- Experience with community development projects
- Experience with working in NGO's

Experience can be substituted for qualifications.

*Personal requrements:*

- Fluent in Tamil and English
- Excellent communication skills
- Good reporting and computer skills
- Ability to work in a team
- Motivated to work in rural areas
- Committed to work under pressure and difficult conditions
- Ability to frequently travel within Jaffna district
- Motorbike driving licence

Women are encouraged to apply
Only short listed candidates will be informed.

C/5184



DAIDO



CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்
52900.00

Koyo
ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

ஏகமுகவர்
செரன்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிடெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341580-1, 2438779,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk



ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.30, 6.30,9.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

விஷால், மீரா ஜஸ்மின் நடித்த

சண்டைக் கோழி

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்



புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அஷிமா மற்றும் பலர் நடித்த

சுதேசி

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

தங்கர்பச்சான், நவ்யா நாயர் நடித்த

சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00


# பணிநிலை வேண்டுகை

**1. பக்க வடிவமைப்பாளர்**

Page maker, photoshop, corel draw தெரிந்தவர்களும் பத்திரிகை துறையில் அல்லது அச்சகத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் 03/04/2006 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

**2. கணினி தட்டச்சாளர்**

கணினியில் வேகமாக தட்டச்சு செய்யக்கூடியவர்கள் இப்பணிநிலைக்கு 03/04/2006 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

குறிப்பு : மேற்படி விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பணிநிலையை எழுதி அனுப்பவும்.

**3. இயந்திர இயக்குநர்**

ஓவ் செற் மிசின் (சொலனா, கோட்) ஆகிய இயந்திரங்களை இயக்கக் கூடியவர்களும், அச்சகத்துறையில் or பத்திரிகைத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் அனுபவ சான்றிதழுடனும் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழுடனும் 03/04/2006 ஆம் திகதி காலை 10 மணிக்கு அலுவலகத்துக்கு சமுகமளிக்கவும்.

**4. இயந்திர பயிற்சியாளர்**

இப்பணிநிலைக்கு ஆர்வமுள்ளவர்கள் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழுடன் 03/04/2006 ஆம் திகதி காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும்.

**நிர்வாக இயக்குனர்,**
**நமது ஈழநாடு,**
**யாழ்ப்பாணம்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுதந்திரக்கட்சித் தலைமைக்கு மகிந்தவை நியமிக்க முயற்சி!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் தலைமைப்பதவியை மகிந்த ஏற்கக்கூடுமெனக் கருதப்படுகிறது.

அத்துடன், அதற்கேற்ற வகையில் கட்சியினுள் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்படி கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராக அல்லது பிரதிப் பொதுச்செயலாளர்களில் ஒருவராக டலஸ் அழப்பெருமவை நியமிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் பிரதித் தலைவர் பதவியை அமைச்சர் அநுர பண்டாரநாயக்கவுக் கும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கட்சியினுள் விசேட பதவியொன்றையும் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாறான மாற்றங்கள் எதையும் தான் அனுமதிக்கப் போவதில்லையென தற்போது லண்டனிலுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், சந்திரிகா இவ்வாறு தெரிவித்த போதிலும், கட்சியின் அதிகாரத்தை தன்வசப்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் தீவிரமாக உள்ளாரெனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (தே)



பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் வரவேற்கிறார்.

# இடம்பெயர்ந்தோரின் விபரங்களை ஒப்படைக்க சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு —

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களால் இடம்பெயர்ந்த மக்களின் விபரங்களை எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் இடம்பெயர்ந்தோர் தங்கள் குடியிருப்புகளுக்கு திரும்ப அனுமதிக்கும் விடயத்தில் நீதிமன்றம் தலையிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை . சேனாதிராசா அடிப்படை உரிமைகள் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்தமனுவை விசாரித்த நீதிமன்றம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையை எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டதுடன், இந்த வழக்கின் மேலதிக விசாரணையை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. நீதிமன்றில் மனுதாரருக்காக சட்டத்தரணி சி.விநாயகமூர்த்தி ஆஜரானார்.

முன்னர் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையின்போது, அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் விவசாய செயற்பாடுகளுக்கு அனுமதிக்க வேண்டும் என்றும், இது தொடர்பான அறிக்கையை யாழ்ப்பாண அரச அதிபரிடமிருந்து பெற்றுத் தருமாறும் சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்பின்னர் நடந்த விசாரணையின்போது இது தொடர்பான அறிக்கையை அரசஅதிபரிடமிருந்து பெற இயலவில்லை என்றும், கால அவகாசம் அளிக்க வேண்டும் என்றும் சட்டமா அதிபர் கோரியிருந்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி இந்தத் தரவுகளைத் தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் 1990 ஆம் ஆண்டு அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து, உறவினர் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் கடந்த 16 ஆண்டு காலமாக வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுயேட்சைக்குழு ஊடாக போட்டியிட ஐ.தே.க முடிவு!

கொழும்பு —

கொழும்பு மாநகரசபை தேர்தலில் சுயேடசைக் குழுவொன்றினூடாக போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுயேட்சைக் குழுக்களுடன் ஐ.தே.கவின் பேச்சுவார்த்தைகள் தொடங்கப் பட்டுள்ளன.

கொழும்பு மாநகரசபைக்கான வேட்புமனு நிராகரிப்பை ரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப் பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தமை, மற்றும் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய அனுமதி மறுக்கப்பட்டமை ஆகியவற்றை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சுயேட்சைக்குழு குழுவினூடாக போட்டியிட்டு கட்சிக்காக வாக்களிக்கவுள்ள மக்களின் வாக்களிப்பு உரிமையைஉறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (தே)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு இந்த ஆண்டுக்குள் ஏற்படுமாம்!

இந்திய சோதிடர் கூறுகிறார்

கொழும்பு —

இலங்கையில் இந்த ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விடும் என்று இந்திய சோதிடர் ஒருவர் தெரிவித்தார். என். கோவிந்து என்ற இந்த சோதிடர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

மகிந்தராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். அனைத்து துறைகளிலும் இலங்கை பாரிய வெற்றியடையும்.

நாட்டு மக்கள் அனைவரும் ஒரு நாள் காலை 6மெணி முதல் மாலை 6 மணிவரை உண்ணாவிரதம் இருந்தால் இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண உதவியாக இருக்கும் என்று அந்த சோதிடர் மேலும் கணிப்புக் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 15ம் திகதி ஆரம்பம்

கொழும்பு —

அனைத்து உளளூராட்சி மன்றங்களினதும் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகுமென உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபைகளின் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இதற்கமைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

அன்றையததினம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்கள், மாநகர சபை தலைவர்கள் உப தலைவர்கள் தெரிவுசெய்யப்படுவரெனவும் அமைச்சர் தெரிவித்தார். (தே)

# ஜே.வி.பி ஆதரவாளர் மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர் ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஜே.வி.பி உறுப்பினர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தினத்தன்று இரவு 9.30 மணியளவில் பெலியத்த - கரவப்பிட்டிய பகுதியில் வைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் மூவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் - இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் மேலும் 5 பேரை பெலியத்த பொலிஸார் தேடிவருகின்றனர்.

## ஆயுதக் களைவில்...

கடற்பிரதேசத்தில் கடற்படையினரின் நடமாட்டத்தைத் தடுக்கும் வகையிலான விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் கவலையளிக்கிறது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் யுத்தத்துக்கு தயாராக உள்ளனர். இது இயற்கையானது. ஆனால், அவர்களைக் கேட்டால் இல்லை என்று தான் சொல்வார்கள். ஆனால், அவர்கள் தயாராகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். டிசம்பர் மற்றும் ஜனவரி மாத வன்முறைகளின் போது போர்நிறுத்த ஒப்பந்தம் முறியும் என்று நினைத்தேன். ஆனால், அது காப்பாற்றப்பட்டுவிட்டதன் மூலம் இரு தரப்பினரும் அமைதி வழித் தீர்வை விரும்புவதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இங்கே இராணுவ வழித் தீர்வு ஏற்படாது. ஏப்ரலில் பேச்சுக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளது.

போர்நிறுத்தம் என்பது நிரந்தரத் தீர்வு அல்ல. துணை ஆயுதக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாவிட்டால் பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

இந்தக் குழுவினருக்கு இராணுவம் உதவி செய்வதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால், அப்படிச் செய்தால் அது மிகப் பெரிய தவறு. அதேவேளை, விடுதலைப் புலிகள் தாங்களே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக அறிவித்து விட்டால் அது மிக மோசமான சூழ்நிலையை உருவாக்கிவிடும்.

இருதரப்பினருக்கும் உயர்நிலை சந்திப்பு மிக அவசியமானது. இதை தள்ளிப்போடக் கூடாது. மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். இனியும் தாமதித்தால் நிலைமை மேலும் மோசமடையும். இருதரப்பு உயர்நிலை அரசியல் சந்திப்பு விரைவில் நடைபெறும் என்று நம்புகிறேன், பிராத்திக்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்காணிப்பு...

ஹென்றிக்சன் 1969ஆம் ஆண்டு சுவீடன் இராணுவத்தில் இணைந்து 1994ஆம் ஆண்டு பிரிகேடியர் ஜெனரலாக பதவியுயர்வு பெற்றார்.

இராணுவத்தில் பல்வேறு பிரிவுகளிலும் கடமையாற்றிய இவர் பொஸ்னியாவில் ஐ.நா அமைதிப் படையிலும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசுடன்...

என்ற நிலைப்பாட்டில் இருந்து இந்தியா மாறாவிடினும், பிரதான சிங்களக் கட்சிகள் சமாதான முயற்சிகளில் இணைந்து செயற்படவேண்டும் என்பது அவசியமாக இருப்பது தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஐ.தே.கவும் இணைந்து தேசிய அரசு அமைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுயல்வது பொருத்தமான வழிமுறையாக இருக்குமென இந்தியத் தரப்பினர் கருதியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் பகைநாடான பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளமை, சீனாவுடன் உறவுகளைப் பலப்படுத்துவது போன்ற விடயங்களால் ரணிலூடாக கொழும்பு அரசியலில் அழுத்தங்களைப் பிரயோகிக்க இந்திய முயல்வதாக புதுடெல்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிழக்கில்...

கண்காணிப்புக்குழுவிடம் திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் முறையிட்டுள்ளார்.

சம்பூர் - நோர்வேத்தீவு கடற்பகுதியில் மீனவர்களை நோக்கி கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் குறித்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

## எமது பலத்தை...

மலையிலும், அம்பாறையிலும் தமிழரசுக்கட்சி அமோக வெற்றிபெற்றுள்ளது.

இது தமிழரசுக்கட்சிக்கு தாயகமக்கள் அளித்துள்ள அங்கீகாரம். அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளர்களும் விடுதலைப் பணியின் வீச்சான செயற்பாடு உடையவர்களாகத் திகழவேண்டும் என க.வே.பாலகுமாரன் மேலும் தெரிவித்தார்.

நேற்று பளை மத்திய கல்லூரியில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் மற்றும் அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றினர்.

எதிர்வரும் ஆறுமாதகாலப் பகுதியில் தமிழர் தாயகத்தின் 45 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Aim 01: Microsoft Office
Introduction,
Word, Excel, Access, PowerPoint.
Day & Night Batches
Day :10.00 am - 1.00 pm
Night :6.00 pm - 8.00 pm
Fast Track
1000/- only
Starts on 03-04-2006
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration, Introduction to Networks.
Aim 02: Hardware & Networking
10 நாட்கள் மட்டும்
Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி
Center for FOSS & LAMP
[C/5179]

## மரண அறிவித்தல்

### திருமதி யூடா மரியகொறற்றி



குருநகர் கடற்கரைவீதியைச்சேர்ந்த திருமதி யூடா மரியகொறற்றி நேற்று முன்தினம் (31.03.2006) காலமானார். அன்னார் யூடாவின் மனைவியும், ரஞ்சித் (டோகா), மரீனா ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற முன்னாள் யாழ் - மாநகரசபை உறுப்பினர் செபஸ்ரி - சௌந்தரம் தம்பதிகளின் புதல்வியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2006) மாலை 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ்.கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடற்கரைவீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அல்பேட் சுவேந்திரன்
(சகோதரன்)

(இ-206)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.